
20-4-1945 முதல் 2-வது வாரம் !
கான ரசம் ததும்பும்
கலா சித்திரம்
ப்ரகதி
ஸ்ரீ வள்ளி
டைரக்ஷன் :-
AV. மெய்யப்பன் &
A.T. கிருஷ்ணஸ்வாமி
G.H.RAO

சேதமின்றி வந்து சேர்ந்தன



முழு நலனுக்காக வேண்டி சரக்குகளை வெளியேற்றுவதற்கு ஜே. கே. கோணிப்பைகளையும், ஹெஸ்ஸெய்ன்ஸ்களையும் உபயோகியுங்கள்.

பிரத்தியேகமான தையல் கெட்டியான முனைகளின் மடிப்புகள் மிகவும் கடினமான எடைகளை தாங்கவும், அதிக உருப்படிகளை நிரப்பவும் ஏதுவாயிருப்பதுடன், பொத்தல் இல்லாமல் செய்து தனி பலத்தைக் கொடுக்கிறது.

எந்தகுறிப்பான சரக்குக்குத்தகுந்தபிரத்தியேகமான அளவுகளும், தினுசுகளும் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

ஜே.கே.ஜூட் மில்ஸ் கோ.,லிட்.

கான்பூர்

இது ஒரு ஜே. கே. தொழில்



இவ்வருஷத்திய மகோன்னத படம்!
5 வது வாரம்
பெங்களூர்
மூவிலண்ட்
மைசூர்
மோதிலால்
எதிர்பாருங்கள்!
சென்னை
மதுரை
கோவை
பாதுகா
கண்ணாம்பா..புஷ்பவல்லி..C.S.R..பந்தா..அத்தங்கி
ஸ்டுடியோ
ஜெமினி
I.A.C
SEENU
நரஸு
....ரிலீஸ்....
FOR ANDHRA, CEDED & NIZAMS: CHAMRIA TALKIE DISTRIBUTORS.


கல்கி
பொருளடக்கம்

மலர் 4
இதழ் 37

1945 ஏப்ரல் 22

பார்த்திப ௵
சித்திரை 10

★



★

உலகத்தில் மூன்றாவது பெரிய மாநகரம் பெர்லின் நகரம்; உலகத்திலேயே பரிசுத்தத்தில் இணையற்ற நகரம்; உலகத்திலே மிகச் சிறந்த விஞ்ஞானிகளும் தத்துவ சாஸ்திரிகளும் ராணுவ தந்திரிகளும் அந்நகரில் வாழ்ந்து வந்தார்கள். இப்பேர்ப்பட்ட நகரத்திற்கு இன்று பெரும் ஆபத்து வந்திருக்கிறது. அந்நகரின் நாலாபுறத்திலிருந்தும் ஒன்பது மாபெரும் சைன்யங்கள் படையெடுத்து வந்து கொண்டிருக்கின்றன. ஆயிற்று; பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளும் ருஷ்யப் படைகளும் அந்நகரில் பிரவேசிப்பது இன்றைக்கோ நாளைக்கோ என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே, ஆயிரக் கணக்கான ஆகாய விமானத் தாக்குதலால் பெருஞ் சேதம் அடைந்திருக்கும் அந்நகரம் இன்னும் சில நாளில் பாழடைந்த சுடுகாடாகக் காட்சி தரப் போகிறது.

பெர்லினுக்கு நேர்ந்த இந்த விபத்துக்குக் காரண பூதரான மனிதர் அதோ அந்த நகரத்தின் மேல் பிரமாண்ட உருவத்துடன் நிற்கும் அடால்ப் ஹிட்லர்தான். ஆனால், அவர் இந்த யுத்தத்தை ஆரம்பித்தபோது இப்படியெல்லாம் நடக்கும் என்று நினைத்தாரா? ஜெர்மானியர்தான் உலகத்தில் சிறந்த ஜாதியார் என்றும் உலகத்தைக் கட்டியாள்வதற்கு உரியவர்கள் என்றும் அவர் கூறினார். ஜெர்மனியின் உலக ஆதிபத்தியத்தை நிலைநாட்டப் போகிறேன் என்றார். "ஐரோப்பாவுக்குள் எந்த எதிரி காலடி எடுத்து வைப்பான், பார்க்கலாம்!" என்றார். "ஜெர்மன் எல்லையில் நுழையும் எதிரி சின்னாபின்னமாவான்" என்றார். அவ்வளவும் வீண் வீம்பாகவும் வெறும் ஆர்ப்பாட்டமாகவும் முடிந்தது.

ஹிட்லருடைய உலக சாம்ராஜ்யப் பகற் கனவும், பெர்லின்மா நகரமும் ஏக காலத்தில் சிதைந்து சின்னாபின்னமாகி அவருடைய காலடியில் சிதறிக் கிடக்கின்றன!

பம்பாய்த் தமிழர்களுக்கு

கிடைத்தற்கரிய ஓர் மகத்தான சந்தர்ப்பம்!



நிருத்ய ஸம்ராட்

ஸ்ரீ S. G. கிருஷ்ண

கோஷ்டியாரின்

நாட்டிய விருந்து!

பாரத நாட்டுப் பல்லவி நடனங்களும்

ஒருங்கே, ஓரிரவில், ஓரிடத்தில்

கண்டுகளிக்கும் பாக்யம்

★

29-4-1945

ஞாயிறு மாலை 6-மணிக்கு

மதுங்கா தென்னிந்திய கல்விச்

சங்கக் கழகத்தில் நடைபெறும்

கட்டணம்: ரூ. 5, ரூ. 2/8, குழந்தைகளுக்கு ரூ. 1/4

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 37

என்ன சேதி?

திருக் கைங்கரியம்

சென்னை நகரில் ஸ்ரீ சத்தியமூர்த்தி வாரம் கொண்டாடப்பட்டபோது, ஒரு கூட்டத்தில் தேசபக்தர் ஸ்ரீ கே. பாஷ்யம் ஓர் உண்மையைச் சொன்னார். அது என்ன என்றால், "கிருஷ்ணா நதிக்கு வடக்கே ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தி பிறந்திருந்தால் அவரையும் பண்டித ஜவாஹர்லாலைக் கொண்டாடுவதைப் போல் கொண்டாடி யிருப்பார்கள்!" என்றார். முக்கியமாகத் தமிழர்களே அவ்விதம் கொண்டாடி யிருப்பார்கள். ஸ்ரீ சத்தியமூர்த்தி அத்தகைய பாக்கியம் செய்யவில்லை. அது காரணத்தினால் மூத்தாள் பிள்ளையாகிய துருவன் இளைய ராணி சுருசியினால் எந்தவிதமாக நடத்தப்பட்டானோ அந்த மாதிரி ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஞாபகம் போற்றப்படுகிறது. இப்போது ஜீவியவந்தர்களாக உள்ள தமிழ் நாட்டுத் தேச பக்தர்களையும் தேசத் தொண்டர்களையும் கூடப் பிற்காலத்தில் வரும் சந்ததிகள் அவ்வாறே நடத்தக் கூடுமென்று நாம் அஞ்சுகிறோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நமது தேச பக்தர்களும் தொண்டர்களுமே திவ்யமாய்ச் செய்து வருகிறார்கள். வடக்கத்தி மோகத்தை வளர்ப்பதற்கும், தமிழ் நாட்டைத் தாழ்த்துவதற்கும் உரிய திருக் கைங்கரியத்தை நன்கு செய்து வருகிறார்கள்.

இன்னும் பலர் உளர்

சில மாதங்களுக்கு முன்பு அரியலூரில் கூடிய அரசியல் மகாநாட்டுக்குப் பம்பாயிலிருந்து ஸ்ரீ என். கே. படீல் வரவழைக்கப் பட்டார். சென்ற வாரத்தில் சென்னையில் நடந்த மூன்றாவது சர்க்கிள் அரசியல் மகாநாட்டுக்கு அதே பம்பாய் நகரிலிருந்து ஸ்ரீ நகின்தாஸ் மாஸ்டர் தருவிக்கப்பட்டார். இன்னும் வடநாட்டில் பூனா, ஆமதாபாத், அலகாபாத், கல்கத்தா, நாக்பூர், லாகூர் முதலிய எத்தனையோ நகரங்கள் இருக்கின்றன. அந்தந்த நகரங்களில் காங்கிரஸ் பிரமுகர்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லாரும் இனி ஒவ்வொரு சர்க்கிள் மகாநாட்டுக்கும், ஜில்லா மகாநாட்டுக்கும், தாலுகா மகாநாட்டுக்கும் வரவழைக்கப் படுவார்கள் என்று நம்புகிறோம். அப்போதுதானே தமிழ் நாட்டு மக்கள், "தேசபக்தி, அரசியல் அறிவு எல்லாம் கிருஷ்ணா நதிக்கு வடக்கே தான் இருக்கிறது; அதற்கு இப்பால் ஒன்றுமே இல்லை" என்னும் மகத்தான உண்மையை நன்கு உணர்வார்கள்!

ஆட்சேபிக்கிறோம்

பிற நாட்டாரை மரியாதை செய்வது நியாயம்; நமது வடநாட்டுச் சகோதரர்களை நாம் அன்புடன் வரவேற்பது ரொம்பவும் நியாயம். விருந்தோம்பல் குணம் தமிழ் மக்களின் பண்பாட்டுக்கு மிகவும் உகந்தது. இதையெல்லாம் நாம் ஆட்சேபிக்க வில்லை. தேசத்துக்கே பொதுவான வடநாட்டுத் தலைவர்களிடம் பக்தி செலுத்துவதையும் நாம் ஆட்சேபிக்கவில்லை. அத்தகைய பக்தியைப் போற்றுகிறோம். ஆனால் பலவீனமான கட்சிக்குப் பலங் கொடுப்பதற்காகவும், செல்வாக்கில்லாத கொள்கைகளுக்குச் சிப்பக் கட்டுக் கட்டுவதற்காகவும் வடநாட்டினர் கொண்டு வரப்படுவதை ஆட்சேபிக்கிறோம். மிகவும் சாமான்யமான மனிதர்களை வட நாட்டிலிருந்து பிடித்துக் கொண்டு வந்து, "ஓகோ! பார்த்தீர்களா! அப்பேர்ப்பட்டவரே இப்படிச் சொல்லிவிட்டார்!" என்று பொது ஜனங்களைத் திணற அடிப்பதை ரொம்பவும் ஆட்சேபிக்கிறோம். இப்படியெல்லாம் செய்வது தமிழ் நாட்டாரின் மரியாதையை அநாவசியமாகக் குறைத்துக் கொள்வதாகும் என்று வற்புறுத்துகிறோம்.

இவர்களை அழைக்கிறார்களா?

ஸ்ரீ எஸ். கே. படீலும், ஸ்ரீ காவின் தாஸ் மாஸ்டரும் அப்படி என்ன பிரமாதமான புதிய உண்மையைச் சொல்லி விட்டார்கள்? ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியாரும் ஸ்ரீ எம். பக்தவத்ஸலமும் என்னத்தைச் சொல்லி வருகிறார்களோ, அதையேதான் அவர்களும் சொன்னார்கள்? இதற்காக அவர்களைப் பம்பாயிலிருந்து ரயில் சார்ஜு செலவு பண்ணி அழைத்துக் கொண்டு வருவானேன்? ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியாரும் ஸ்ரீ எம். பக்தவத்ஸலமும் மேற்படி பம்பாய்த் தலைவர்களை விட எந்த விதத்திலே குறைந்தவர்கள்? தியாகத்திலா, தேசத்தொண்டிலா, அந்தஸ்திலா, எந்த விதத்தில் குறைந்தவர்கள்? அப்படியிருக்க, ஒரு விஷயத்தை இவர்கள் சொன்னாலே போதாதா? இவர்கள் சொல்லித் தமிழ் மக்கள் ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்ளவில்லையென்றால், அதற்குச் சிம்பு வைத்துக் கட்டப் பம்பாயிலிருந்து சாதாரண மனிதர்களைக் கொண்டுவந்து அவர்களை 'ஓஹோ' என்று தூக்கிவைத்துப் பிரமாதப் படுத்த வேண்டுமா? நல்லது; இதேமாதிரி பம்பாயில் வந்து பிரசாரம் செய்ய ஸ்ரீ சி. என். முத்துரங்க முதலியாரையும் ஸ்ரீ பக்தவத்ஸலத்தையும் யாராவது கூப்பிடுகிறார்களா? அல்லது நமது சென்னை மேயர் ஸ்ரீ ராதா கிருஷ்ணப் பிள்ளை அவர்களைத்தான் பம்பாயில் நடக்கும் மகாநாட்டைத் திறந்து வைக்க அழைக்கிறார்களா? பொதுவாக வடநாட்டார் தமிழ் மக்களை அலட்சியம் செய்கிறார்கள் என்பது வெளிப்படை. அந்த அலட்சியத்தை மேலும் மேலும் வளர்ப்பதற்குரிய காரியங்களை நாம் செய்துகொண்டு வருகிறோம். ஏன், நமக்கு அடுத்த ஆந்திர தேசத்திலேகூட இம்மாதிரி காரியம் நடைபெறுவதாகத் தெரியவில்லையே! தமிழர்கள் தலையிலே மட்டுந்தானா இம்மாதிரியெல்லாம் அவமதிக்கப் பட வேண்டும் என்று எழுதியிருக்கிறது?

குழந்தை ரூஸ்வெல்ட்டின் கவலை!

விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா? பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பிற்காலத்தில் இவ்வளவு பெரிய சுதந்திரப் பிரியராகி, நாலு வகைச் சுதந்திரங்களைப் பற்றி ஓயாமல் பேசப் போகிறார் என்பதற்கு அறிகுறி, அவருடைய இளம் வயதிலேயே காணப்பட்டதாம். இதை விளக்கக்கூடிய சம்பவம் வருமாறு:—

அப்போது ரூஸ்வெல்ட் குழந்தை. வயது ஐந்து அல்லது ஆறு இருக்கலாம். ஒரு நாள் அவர் ஓடியாடித் திரியாமல் ஒரே இடத்திலேயே உட்கார்ந்திருந்தார். சுற்றிலும் தின்பண்டங்களும் பொம்மைகளும் இருந்தன. அவர் எதையும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. அவருடைய முகத்திலே கவலை ததும்பியிருந்தது. தன் அருமை மகன் அவ்வளவு கவலையாக உட்கார்ந்திருப்பதைக் காண அன்னைக்கு மனம் தாளவில்லை. மகனருகே சென்று அவன் தலையைத் தடவிக் கொடுத்து, கன்னத்தில் முத்தமிட்டு, "கண்ணே, உனக்கு என்ன வேண்டும்? சொல்!" என்று கேட்டாள்.

ஆனால் பையன் வாய் திறக்கவில்லை. தாயின் பரபரப்பு அதிகமாயிற்று. அவள் குழந்தையைப் பார்த்து, "குழந்தாய்! சொல்லு, சொல்லு! ஏன் இப்படி இருக்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்றாள்.





குழந்தை ரூஸ்வெல்ட்

பையன் கொஞ்ச நேரம் வரை மௌனமாய் இருந்தான். பின்பு, திடீரென்று அவன் முகத்தில் பிரகாசம் உண்டாயிற்று. "ஆ, சுதந்திரம், சுதந்திரம், எனக்குச் சுதந்திரம் வேண்டும்!" என்றான்.


இந்த நிகழ்ச்சியை ரூஸ்வெல்ட்டின் தாயார் சொன்னதாகப் பிரபல அமெரிக்க ஆசிரியர் காம்டன் மெக்கன்ஸி கூறியுள்ளார். ஆனால், நல்லவேளை, இந்தக் கதையை நம்புவதற்கும் நம்பாமல் இருப்பதற்கும் மட்டும் ரூஸ்வெல்ட்டின் புண்ணியத்தால் நமக்குச் சுதந்திரம் இருக்கிறது!

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் . . .




பொது ஜனங்களின்
ஆதரவு பெற்று ஜனாதிபதியானார்.
ஒயிட் ஹவுஸ்
எந்த நிலைமையிலும்
உற்சாகம் குன்றாதவர்.
10
முதலாளிகளின் விரோதி.
11
சாதாரண ஜனங்களின்
உற்ற துணைவர்.
12
பொருளாதார
நெருக்கடியிலிருந்து
அமெரிக்காவைக்
காப்பாற்றியவர்.
13
பத்திரிகைகளின்
தோழர்.
14

-உம்மன்


அச்சு நாடுகளின் பரம விரோதி.
15
சம்பிரதாயத்தைக் கிழித்தெறிந்தவர்.
இரண்டு தடவைக்குமேல் பிரஸிடெண்ட் ஆகக்கூடாது.
16
செத்துப் பிறந்த அட்லாண்டிக் சாஸனத்தைப் பெற்றெடுத்தவர்.
17
தீர்க்க திருஷ்டி யுள்ளவராயினும் சர்ச்சிலின் முதுகினால் பார்வை குன்றியவர்.
18
மொத்தத்தில் மிகப்பெரிய மனிதர்; அவருடைய வாழ்வு முடிந்து போதிலும், உலகம் அவரை மறவாது.
பிறப்பு-1882.
மறைவு-1945
19

சிவகாமியின் சபதம்



மணியம்

பதினான்காம் அத்தியாயம்

"வாழி நீ மயிலே!"

ஆயனரும் சிவகாமியும் அந்த விஸ்தாரமான சபா மண்டபத்துக்குள் பிரவேசித்தபோது, மண்டபத்தில் வீற்றிருந்தவர்கள் அத்தனை பேருடைய கண்களும் அவர்கள் மீது சென்றன. வியப்பும் குதூகலமும் ஆவலும் பரபரப்பும் அந்த ஈராயிரம் கண்களிலேயும் ததும்பின.

சபையில் அப்போது வீற்றிருந்தவர்களில் ஒரு சிலர் ஒன்றரை வருஷத்துக்கு முன்னால் அதே மண்டபத்தில் நடந்த சிவகாமியின் அரங்கேற்றத்தின்போது அங்கே பிரசன்னமாயிருந்தவர்கள். மற்றும் அநேகர் அந்த அரங்கேற்றத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தவர்கள். சிவகாமியின் அரங்கேற்றம் அந்த மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த சமயத்திலேதான் முதன் முதலில் புலிகேசியின் படையெடுப்பைப் பற்றிய செய்தி கிடைத்ததென்பதையும், அதனால் அரங்கேற்றம் தடைப்பட்டதென்பதையும் அவர்கள் எல்லாரும் நினைவு கூர்ந்தார்கள். அந்தத் தடைக்குக் காரணமான புலிகேசி சக்கரவர்த்தி அச்சமயம் அந்தச் சபையில வீற்றிருக்கும் அதிசயத்தை எண்ணியபோது அவர்கள் எல்லாருடைய கண்களும் மாறி மாறிச் சிவகாமியையும் புலிகேசியையும் நோக்குவனவாயின.

ஆயனரும் சிவகாமியும் சபா மண்டபத்துக்குள் பிரவேசித்து வரும் காட்சியைப் பார்த்தவுடன், எல்லாரையும் போல் வாதாபி மன்னரும் சிறிது நேரம் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தார். அஜந்தா மலையின் ஆழ்ந்த குகைகளுக்குள்ளே அவர் கண்டிருந்த அற்புத வர்ண சித்திர உருவங்களில் ஒன்றுதான் உயிர் பெற்று எழுந்து தம் கண் முன்னால் நடந்து வருகிறதோ என்று அவருக்குத் தோன்றிற்று. சௌந்தரியவதிகளான எத்தனையோ பெண்களை அவர் பார்த்ததுண்டு. ஆனால், இம்மாதிரி நடையழகு வாய்ந்த பெண்ணைப் பார்த்தது கிடையாது. சிவகாமி நடந்து வந்தபோது, அவளுடைய பாதங்கள் பூமியில் பட்டனவோ படவில்லையோ என்று தெரியாதபடி நடந்தாள். சங்கீதக் கலையின் உயிர்த் தத்துவத்தை உணர்ந்து இசைப் புலவன் பாடும்போது எப்படி ஒவ்வொரு ஸ்வரமும் தனித்தனியாகவும் அதே சமயத்தில் ஒன்றோடொன்று இழைந்தும் கேட்கப் படுகிறதோ, அதுபோல் சிவகாமி நடந்தபோது, அவள் அடிகள் எடுத்து வைக்கிறாளோ அல்லது பூமிதான் அவளுடைய பாதங்களுக்குக் கீழே நழுவிச் சென்று கொண்டிருக்கிறதோ என்று தோன்றியது. பல ஸ்வரங்களைச் சேர்த்துப் பாடுங்கால் எப்படி ஒரு தனிப் பண் வடிவம் ஏற்பட்டு அதற்கு ஒரு தனிச் சாயலும் உண்டாகின்றதோ, அதுபோல் சிவகாமியின் நடையும் ஒரு தனி உருவமும் சாயலும் பெற்றுப் பார்ப்பவர்களுக்குச் சௌந்தரிய போதையை உண்டாக்குவதாயிருந்தது.

கல்கி

அவ்விதம் மாய மோகன நடை நடந்து வருகிறவள், சற்றுமுன்னால் தங்கள் சம்பாஷணைக்குப் பாத்திரமாயிருந்த சிவகாமியாய்த்தானிருக்க வேண்டும் என்று புலிகேசி உடனே தீர்மானித்துக் கொண்டார். அதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காக மகேந்திர பல்லவரை நோக்கினார்.

சிவகாமியைப் பார்த்ததும் புலிகேசியின் முகத்தில் ஏற்பட்ட வியப்பையும் திகைப்பையும் கவனித்துக் கொண்டிருந்த மகேந்திர பல்லவரும் உடனே "ஆம், சத்யாச்ரயா! இவள்தான் தாங்கள் சற்று முன்னால் கேட்ட நாட்டியக் கலைவாணி; பரத நாட்டிய சாஸ்திரத்தை எழுதிய முனிவர் தமது கற்பனையிலே கூட அந்தக் கலைக்கு இவ்வளவு சோபை தரக்கூடிய ஒரு பெண் ஏற்படுவாள் என்று நினைத்திருக்க மாட்டார்!" என்றார்.

மேற்கண்டவாறு சபா மண்டபத்திலிருந்த அத்தனை பேருடைய கண்களுக்கும் சிந்தனைக்கும் வேலை கொடுத்துக் கொண்டு பிரவேசித்த சிவகாமியோ, அவ்விதம் எல்லாருடைய கவனத்துக்கும் கண் நோக்குக்கும் தான் ஆளாகியிருப்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. உயர் குலத்துப் பெண்டிருக்குரிய இயற்கையான நாணத்தினால சிறிதளவு தலை குனிந்த வண்ணம் அவள் நடந்து வந்தாள். நடக்கும்போது சபையை ஏறிட்டோ, கண்களைச் சுழற்றியோ அவள் பார்க்கவில்லை. அவ்விதம் பார்க்க வேண்டுமென்று அவளுடைய உள்ளம் பரபரத்தது; கண்ணிமைகள் துடிதுடித்தன. அவளுடைய உள்ளத்தில் அல்லும் பகலும் குடிகொண்டிருந்த கம்பீர முகத்துக்குரியவர் அந்தச் சபையில் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து கொள்ள அவளுக்கு அளவற்ற ஆவல் இருந்தது. எனினும், அந்த ஆவலைப் பெருமுயற்சி செய்து அவள் அடக்கிக் கொண்டு சுபாவிகமாக எதிரே பார்த்துக் கொண்டு நடந்தாள்.

இரண்டு சக்கரவர்த்திகளும் வீற்றிருந்த இடத்துக்கு அருகில் வந்ததும், ஆயனர் கும்பிட்டு நிற்க, சிவகாமி தரையிலே மண்டியிட்டுச் சக்கரவர்த்தியின் முன்னால் நமஸ்கரித்து எழுந்து, தரையைப் பார்த்த வண்ணம் நின்றாள்.

மகேந்திர பல்லவர், "ஆயனரே! உமது புதல்வி சிவகாமியின் நாட்டியக் கலைத் திறமையின் புகழானது நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் பரவி, வாதாபி சக்கரவர்த்தியின் காது வரையில் எட்டியிருக்கிறது. இதோ இன்று நமது அருகில் நமது அருமைச் சிநேகிதராக வீற்றிருக்கும் சத்யாச்ரய புலிகேசி மன்னர் சிவகாமியின் நடனத்தைப் பார்க்க விரும்புகிறார். அதற்காகவே உங்களை இவ்வளவு அவசரமாகக் கூட்டி வரச் செய்தேன். சிவகாமியினால் இப்போது உடனே நடனம் ஆட முடியுமா? அதற்கு வேண்டிய உற்சாகம் அவளுக்கு இருக்கிறதா? உம்முடைய விருப்பம் என்ன?" என்று வினவியபோது, ஆயனர், "மகாப் பிரபு! என்னுடைய விருப்பத்தைக் கேட்க வேண்டுமா? தங்களுடைய கட்டளை எதுவோ, அதுதான் என்னுடைய விருப்பம். சிவகாமிக்கு, அவளுடைய கலைத் திறமையைக் காட்டுவதற்கு இதைக் காட்டிலும் சிறந்த சபையும் சந்தர்ப்பமும் எங்கே கிடைக்கப் போகிறது? இரண்டு மாபெரும் சக்கரவர்த்திகளும் இரண்டு சூரியர்களைப் போலவும் இரண்டு தேவேந்திரர்களைப் போலவும் ஏக காலத்தில் கூடியிருக்கிறீர்கள்! சிவகாமியின் பாக்கியமே பாக்கியம்!" என்று சொல்லி விட்டுச் சிவகாமியை நோக்கினார்.

முதலில் மகேந்திர பல்லவர் பேசிய போது, சிவகாமி சிறிது தலை நிமிர்ந்து அரைக் கண்ணால் வாதாபி சக்கரவர்த்தியைப் பார்த்தாள். பிறகு, அவளுடைய கண்கள் கட்டுக் காவல்களை உடைத்துக் கொண்டு இரண்டு சக்கரவர்த்திகளின் சிம்மாசனங்களையும் சுற்றிச் சிறிது தூரத்துக்கு வட்டமிட்டன. ஆனால் அவை அடைந்தது ஏமாற்றந்தான். சிவகாமியின் கண்கள் தேடிய வீர சௌந்தரிய வதனம் அங்கே தென்படவில்லை. "ஆ! அவர் எங்கே? ஏன் சக்கரவர்த்திக்கு அருகில் அவர் காணப்படவில்லை?" என்று அவளுடைய உள்ளம் பதைபதைத்தது. சில கண நேரத்திற்குள் பற்பல எண்ணங்கள் மின்

னலைப்போல் தோன்றி மறைந்தன. ஏதாவது அவருக்கு விபத்து நேர்ந்திருக்குமோ? இராது. இராது. அப்படி இருந்தால், மகேந்திர பல்லவர் இந்த வைபவத்தை நடத்துவாரா? மாட்டார்! சபையில் வேறு எங்கேயாவது, தன்னுடைய பார்வைக்கு அகப்படாத தனி இடத்தில், அவர் இருப்பாரா?......

இவ்விதம் எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போதே சிவகாமியின் ஒரு செவி சக்கரவர்த்திக்கும் ஆயனருக்கும் நடந்த மேலே கண்ட சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்தது. ஆயனர் "சிவகாமியின் பாக்கியமே பாக்கியம்!" என்று கூறி முடித்தபோது, சிவகாமி தலை வணங்கித் தன் சம்மதத்தைச் சமிக்ஞையினால் தெரிவித்தாள்.

"மிக்க சந்தோஷம்! அதோ வாத்திய கோஷ்டியும் ஆயத்தமாயிருக்கிறது. நடனம் உடனே ஆரம்பமாகட்டும். உங்களுக்காகவே இந்தச் சபையை இவ்வளவு நேரம் வளர்த்திக் கொண்டிருந்தோம்!" என்றார் மகேந்திர பல்லவர்.

சிவகாமி அவ்விடத்தை விட்டு நடன வட்டத்துக்குப் போகத் திரும்பிய போது, மீண்டும் அவளுடைய கண்கள் ஒருமுறை சுற்றிச் சுழன்றன. அப்போது அவளுடைய பார்வை தற்செயலாக மறுபடியும் புலிகேசியின் முகத்தில் விழுந்தது. வெறித்து நோக்கிய புலிகேசியின் கொடுங் கண்கள் அவளுடைய கண்களைச் சந்தித்து ஊடுருவியபோது, திடீரென்று வீசிய வாடைக் காற்றில் அடிபட்ட மல்லிகைக் கொடியைப் போல் அவளுடைய உள்ளம் உடம்பு எல்லாம் சில்லிட்டு நடுங்கிற்று. இது ஒரு விநாடி நேரந்தான் நீடித்திருந்தது. அகாரணமானதாகத் தோன்றிய அந்த உணர்ச்சியை எப்படியோ சிவகாமி சமாளித்துக் கொண்டு அங்கிருந்து திரும்பி நடன வட்டத்தை நோக்கி நடந்தாள். அப்போது, இன்னதென்று சொல்ல முடியாத அருவமான நிழல் போன்ற ஞாபகம் ஒன்று அவளைப் பின் தொடர்ந்து சென்றது.

நடன வட்டத்தில் சென்று நின்றதும் சிவகாமி மேற்கூறிய நிழல் ஞாபகத்தை உதறித் தள்ளிவிட்டு, ஆட்டத்துக்கு ஆயத்தமானாள். அப்போது அவள் தன்னடக்கத்துக்குப் பங்கமில்லாமல் அந்த மகாசபையின் நாலா புறத்திலும் கண்ணைச் சுழற்றிப் பார்த்தல் சாத்தியமாயிருந்தது. மண்டபத்தின் மேல் மச்சு மாடங்களிலே சக்கரவர்த்தினியும் மற்ற அந்தப்புரத்து மாதர்களும் வீற்றிருப்பது அவள் பார்வைக்குப் புலனாயிற்று. உடனே, முன்னொரு நாள் அதே மண்டபத்தில் நடந்த அரங்கேற்றத்தின்போது இன்று போலவே மாமல்லரைக் காணாமல் முதலில் தான் ஏமாற்றமடைந்ததும், பிற்பாடு அவர் தாய்மார்களுடனே மேல் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரியப்படுத்தியதும் நினைவு வந்தது. இன்றைக்கும் அவர் அவ்வாறே தன் கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு மறைவான இடத்திலிருந்து தன் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இந்த எண்ணம் ஏற்பட்டதும், இதற்குமுன் அவளுக்கு ஏற்பட்டிருந்த ஏமாற்றம், சோர்வு, மனக் கலக்கம், நடுக்கம் எல்லாம் மாயமாய் மறைந்தன. நடனமும் உடனே ஆரம்பமாயிற்று.

* * *


சிவகாமி அன்று அந்தச் சபா மண்டபத்தில் ஆடிய நடனமானது பல வகையில் சரித்திரப் பிரசித்தி பெறுவதாயிருந்தது.

அந்த நாளில் தென்னாட்டில் பரத நாட்டியம் பயின்றவர்கள் எத்தனையோ பேர் இருந்தார்கள்.

அன்றைக்குப் பல நூற்றாண்டு காலத்துக்கு முன்னாலிருந்து தென்னாட்டில் நடனக் கலை ஓங்கி வளர்ந்திருந்தது. பரத சாஸ்திரமும் அதற்கு வெகு காலத்துக்கு முன்பே எழுதப்பட்டிருந்தது.

பரதநாட்டியக் கலையின் நுட்பங்களை உணர்ந்து அநுபவிக்கக் கூடியவர்களான ரஸிகர்கள் எவ்வளவோ பேர் நாட்டில் இருந்தார்கள்.

அவ்விதம் நெடுங்காலமாக ஓங்கி வளர்ந்து பண்பட்டுச் சிறந்திருந்த பரதநாட்டியக் கலையின் சரித்திரத்தி



லேயே, அன்று சிவகாமி ஆடிய நடனம் ஒரு மகத்தான அபூர்வ சம்பவமாயிற்று.

நடனம் ஆரம்பமாகிச் சிறிது நேரத்துக்கெல்லாம் அச்சபையில் இருந்தவர்கள் எல்லாம், அது ஒரு இராஜ சபை என்பதையும், அதில் ஒரு பெண் நடனமாடுகிறாள் என்பதையும், தாங்கள் அங்கேயிருந்து அதைப் பார்க்கிறோம் என்பதையும் மறந்தே போனார்கள். இந்தச் சட உலகத்தையே விட்டு விட்டு அனைவரும் ஒரு புதிய ஆனந்தக் கனவு லோகத்துக்கே போய் விட்டார்கள்.

* * *

நடனம் ஆரம்பமாகும் சமயத்தில் சிவகாமியும் தெளிந்த தன்னுணர்ச்சி பெற்றிருந்தாள்.

தன் வாழ்க்கையிலேயே அது ஒரு முக்கியமான தினம் என்றும், அன்று தான் ஆடப் போகும் நடனமும் தன் வாழ்க்கையில் ஒரு முக்கிய சம்பவம் என்றும் அவள் உணர்ந்திருந்தாள்.

கன்னி சிவகாமியின் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த இரு பேருணர்ச்சிகளில் ஒன்று மாமல்லர் மேல் கொண்ட காதல் என்பதையும், இன்னொன்று நடனக் கலைமீது அவளுக்கிருந்த பிரேமை என்பதையும் முன்னமே பார்த்திருக்கிறோம்.

தன்னுடைய நடனக் கலையைப் பார்த்து அநுபவிக்கக்கூடிய ரஸிகர்கள் அடங்கிய மகா சபைகளில் ஆட வேண்டும், அவர்களுடைய பாராட்டுதலைப் பெற வேண்டுமென்னும் பேரவாவானது, மாமல்லர்மேல் அவள் கொண்டிருந்த காதல் உணர்ச்சியுடன் அவள் உள்ளத்திலே போட்டியிட்டுக் கொண்டிருந்தது.

இப்போது இங்கே கூடியிருப்பது போன்ற ஒரு மகா சபை தனது கலைத் திறமையைக் காட்டுவதற்குக் கிடைப்பது மிகவும் அரிது என்பதை ஆயனரைப் போல் அவளும் உணர்ந்திருந்தாள்.

பாரத தேசத்தில் அந் நாளில் பிரசித்தி பெற்றிருந்த இரண்டு மகா சக்கரவர்த்திகளும் அவர்களுடைய பரிவாரங்களும் அல்லவா அந்தச் சபையில் வீற்றிருக்கிறார்கள்?

அன்றியும் சிவகாமிக்குத் தன்னுடைய கலைத் திறமை முழுவதையும் அந்தச் சபையில் காட்ட வேண்டுமென்ற ஊக்கம் ஏற்படுவதற்கு இன்னொரு முக்கிய காரணம் இருந்தது.

மகேந்திர பல்லவர் மற்ற விஷயங்களில் எவ்வளவு கடின சித்தராயிருந்த போதிலும், கலைகளுக்கு மனம் உருகக் கூடியவர். தன் கலைத் திறமையினால் அவருடைய நன்மதிப்பைக் கவர வேண்டும்; தான் மாமல்லரை மணந்து கொள்வதற்கு அவர் தடை சொல்லாதபடி செய்ய வேண்டும். வயிர நெஞ்சமுள்ள ஒரு மகா சக்கரவர்த்தியின் மனத்தை மாற்றித் தன் விருப்பத்துக்கிணங்கும்படி செய்வதற்குத் தன்னிடம் உள்ள ஒரே ஆயுதம் நடனக் கலையேயல்லவா?

எனவே, அன்றைக்குத் தன்னுடைய நடனம் பரத நாட்டியத்தின் சரித்திரத்திலேயே ஒரு அற்புத சம்பவமாயிருக்க வேண்டுமென்று சிவகாமி சங்கற்பம் செய்து கொண்டாள்.

ஆனால் இந்தமாதிரி தன்னுணர்ச்சியெல்லாம், அவள் ஆட்டத்தைத் தொடங்கும் வரையிலேதான் இருந்தது.

ஆட்டம் ஆரம்பமாயிற்றோ, இல்லையோ, இத்தனை காலமும் சிவகாமியின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த கலை உணர்ச்சியானது பொங்கிப் பெருகத் தொடங்கியது. சிவகாமி தான் என்னும் உணர்ச்சி அற்றுக் கலை வடிவமாகவே மாறி விட்டாள்.

பின்னர் சிவகாமி நடனம் ஆடவில்லை; நடனக் கலையானது அவளை ஆட்கொண்டு ஆட்டுவித்தது.

சிவகாமியின் உள்ளமானது நாட்டியக் கலையின் அம்சங்களாகிற தாளங்களையும், ஜதிகளையும், அடவுகளையும், நிர்மாணங்களையும் பற்றி எண்ணவில்லை. அந்தத் தாளங்கள், ஜதிகள், அடவுகள், நிர்மாணங்கள் எல்லாம், அவை அவை அந்தந்த இடத்தில் ஓடி வந்து சிவகாமிக்குச் சேவை செய்தன.

சிவகாமியின் உள்ளம் ஆனந்த வெளியிலே மிதந்து கொண்டிருந்தது. அவளுடைய தேகமோ எல்லையற்ற ஆனந்த வெள்ளத்திலே அநாயாசமாக மிதந்தது.

பார்த்துக் கொண்டிருந்த சபையோர்களும் ஆனந்த சாகரத்தில் மிதக்கலாயினர்.


பரதநாட்டிய வினிகையில் முதற் பகுதியான 'நிருத்தம்' முடிவடைந்த போதுதான் சபையோர் தாங்கள் இத்தனை நேரம் சஞ்சரித்த ஆனந்தக் கனவு லோகத்திலிருந்து பூவுலகத்துக்கு வந்தனர்.

அப்போது சபையின் நாலு புறங்களிலிருந்தும் பிரமாதமான கரகோஷம் எழுந்தது. அவ்விதம் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தவர்கள் இரு சக்கரவர்த்திகளும் கூடத்தான். முக்கியமாக, வாதாபி சக்கரவர்த்தியின் உற்சாகம் அளவு கடந்ததாயிருந்தது.

• • •

நடனம் ஆரம்பிப்பதற்கு முன்னால், சிவகாமியும் ஆயனரும் மகேந்திர சக்கரவர்த்தியிடம் கட்டளை பெற்றுக் கொண்டு நடன வட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, வாதாபி மன்னர் மகேந்திர பல்லவரைப் பார்த்து, "இதென்ன? இவர்களுக்குப் பிரமாத மரியாதை செய்கிறீர்களே? எங்கள் நாட்டிலேயாயிருந்தால், சாட்டையினால் அடித்து நடனம் ஆடச் சொல்வோம்!" என்றார்.

"சத்யாச்ரயா! எங்கள் நாட்டில் அப்படியில்லை. இங்கே கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் நாங்கள் மிகவும் மரியாதை செய்கிறோம். இராஜ்யம் ஆளும்



மன்னர்களையும் சக்கரவர்த்திகளையும் போலவே கலை உலகிலும் இங்கே அரசர்களும் சக்கரவர்த்திகளும் உண்டு. 'சிற்ப சக்கரவர்த்தி' 'கவிச்சக்கரவர்த்தி' என்ற பட்டங்கள் அளிக்கிறோம். இதோ போகிறாரே, ஆயனர். இவர் 'சிற்ப சக்கரவர்த்தி' என்ற பட்டம் பெற்றவர். சாதாரணமாய், இராஜ்யம் ஆளும் சக்கரவர்த்திகளுக்குச் செய்யும் மரியாதையை மக்கள் இவருக்கும் செய்கிறார்கள்'' என்றார்.

'' அழகாயிருக்கிறது உங்கள் நாட்டின் வழக்கம்!'' என்று பரிகசித்தார் வாதாபி மன்னர்.

சிவகாமியின் நிருத்தம் முடிந்தவுடனே வாதாபி சக்கரவர்த்தியும் மற்றவர்களைப்போல் கரகோஷத்தில் ஈடுபட்டதைக் கண்ட மகேந்திர பல்லவர் பெரிதும் திருப்தியடைந்தவராய், '' இப்போது என்ன சொல்கிறீர்கள்? கலைஞர்களுக்கு மரியாதை செய்வது பற்றி உங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டீர்களா?'' என்று கேட்டார்.

'' நடனம் அற்புதமாய்த் தானிருக்கிறது. இம்மாதிரி நான் பார்த்ததேயில்லை. ஆனாலும்...'' என்று கூறி இடையில் நிறுத்திவிட்டுப் புலிகேசி ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

* * *

சபையோரின் பலத்த கரகோஷமானது சிவகாமியையும் அவள் மிதந்து கொண்டிருந்த ஆனந்த உலகத்திலேயிருந்து பூலோகத்திற்குக் கொண்டு வந்தது.

இரண்டு மகா சக்கரவர்த்திகள் வீற்றிருக்கும் மாபெரும் சபையில் தான் நடனமாடிக் கொண்டிருப்பது அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது. நிருத்தப் பகுதி முடிந்து விட்டதென்பதையும், இனிமேல் அபிநயம் தொடங்க வேண்டுமென்பதையும் நினைவு கூர்ந்தாள்.

அன்று அபிநயத்துக்குச் சிவகாமி முதன் முதலாக எடுத்துக்கொண்ட பாடல் செந்தமிழ் நாட்டின் அதிதேவதையான வேலனைப் பற்றியது.

வேலன் தன்னிடம் பக்திகொண்ட பெண்ணுக்கு, '' நான் திரும்ப வந்து உன்னை ஆட்கொள்கிறேன்!'' என்று வேலின்மீது ஆணையிட்டு வாக்களித்திருக்கிறான். ஆனால் அவ்வாக்குறுதியை அவன் நிறைவேற்ற வில்லை. அதனால் அந்தப் பெண் ஏமாற்றமும் மனத் துயரமும் அடைகிறாள். அந்த நிலைமையிலும் வேலனிடத்திலே கோபங் கொள்ளவோ, அவன்மீது குறை சொல்லவோ அவளுக்கு விருப்பமில்லை. எனவே, குற்றத்தையெல்லாம் வேலனுடைய வாகனமாகிய மயிலின் மீது போடுகிறாள். மயிலை நிந்திக்கிறாள்; கோபிக்கிறாள்; பலவிதமாகவும் இடித்துக் காட்டுகிறாள். இந்தக் காலத்தில் 'ஆனந்த பைரவி' என்று வழங்கும் பழமையான ராகத்தில், நடனத்துக்கும் அபிநயத்துக்கும் ஏற்ற தாளத்துடன் அமைந்திருந்த அந்தப் பாடல் பின் வருமாறு:—

மறவேன் மறவே னென்று வேலின்மேல் ஆணையிட்ட
மன்னரும் மறப்பாரோ — நீல மயிலே! (மற)

உருகி உருகி உள்ளம் அவரை நினைவதையும்
உயிரும் கரைவதையும் — அறியாரோ மயிலே? (மற)

அன்பர் வரவு நோக்கி இங்குநான் காத்திருக்க
அன்ன நடை பயில்வாயோ — வன்ன மயிலே!
பெம்மான் உன் மேலே வரும் பெருமிதம் தலைக்கேறி
பாதையை மறந்தாயோ — பேதை மயிலே!
வன்மம் மனதில் கொண்டு வஞ்சம் தீர்க்க நினைத்து
வழியில் உறங்கினையோ — வாழி நீ மயிலே! (மற)

தன்னிகரில்லாதான் தனயர்பால் மையல் கொண்ட
மங்கை மீ திரங்காயோ — தங்க மயிலே!
சொன்னாலும் நீ அறியாய் சொந்த அறிவுமில்லாய்
உன்னை நொந் தாவதென்ன? — வன்கண் மயிலே!
மன்னும் கரிபரிகள் புவியில் பல இருக்க
உன்னை ஊர்தியாய்க் கொண்டார் — தன்னையே நோகவேணும் (மற)



உதவிக்
கச்சேரி செய்ய
எம். எஸ்.
பம்பாய்க்கு
விஜயம் செய்கிறார்!

தென்னிந்திய கல்வி சங்க பள்ளிக்கூடக் கட்டிட நிதிக்காக

5-5-1945 சனிக்கிழமை இரவு 8-30 மணிக்கு

மாதுங்கா - கிங்க்ஸ் சர்க்கிள் - இந்தியன் ஜிம்கானு கிரௌண்டில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டிருக்கும் பந்தலில்

★

ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மி	...	பாட்டு
தஞ்சாவூர் ஸ்ரீ T. D. சங்கரய்யர்	...	பிடில்
கல்பாத்தி ஸ்ரீ ராமனாதன்	...	மிருதங்கம்
மதராஸ் ஸ்ரீ வேணு நாயக்கர்	...	கஞ்சிரா
ஆலங்குடி ஸ்ரீ ராமச்சந்திரன்	...	கடம்

டிக்கட்டுகள் விபரம்:

ஆதரவாளர்கள்: ரூ. 100/: ரிஸர்வ் வகுப்பு ரூ. 50/:
முதல் வகுப்பு ரூ. 25/: இரண்டாம் வகுப்பு ரூ. 10/:

வான சஞ்சாரம்

இசைத் தேன்

'பார்த்திப' என்ற தமிழ்ப் புதுவருஷம் உயர்ந்த ராக சங்கீதக் களஞ்சியமாகவே இருக்கும் போல் தோன்றுகிறது. 13ல் சென்னை நிலையத்தில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இனிய கானத்துடன் புது வருஷம் பிறந்தது. அவரது இணையற்ற சாரீரத்துடன் அன்று காலை முக்கால் மணி நேரம் தேன் மாரியான இசை விருந்து அளித்தார். ஹம்ஸத்வனி ஆலாபனையுடன் ஆரம்பித்து, அதன் உருப்படியில் 'பக்த ரஞ்சகனே' என்பதில் நீண்ட கார்வையைக் கொடுத்து ரசிகர்களின் காதுகளை நாத வெள்ளத்தால் நிரப்பினார். பைரவி அமோகமா யிருந்ததோடு 'யாரோ இவர் யாரோ' உருப்படியில் 'சந்திர பிம்பமுக' என்ற இடத்தில் நிரவல் செய்து இசையைப் பொழிந்தார். 'ஒருதரம் சரவண பவ' விருத்தத்தை பிலஹரி, தன்யாசி முதலிய ராகங்களாலான மாலிகையில் அமைத்து மனதுருகச் செய்தார். எல்லாவற்றையும்விட 'மாலைப்பொழுதினிலே' என்ற பாட்டை மற்றொரு ராகமாலிகையாய் விளம்பியது பாவம் பொழிவுடன் வெகு சிறப்பாயிருந்தது. புதிய கிராமிய சங்கீத மெட்டில் பாடப்பட்ட பாரதியாரின் 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்ற கீதம் சுதந்திர ஆனந்தத்தையே ஊட்டுவதா யிருந்தது. 'செந்தமிழ் நாடெனும்' கீதத்தால் நாட்டின் பெருமையை முழக்கிவிட்டு, தமிழ் நாட்டு மங்களமாம் 'வாழிய செந்தமிழ்' பாட்டுடன் இனிது முடித்தார்.

* * *

தற்காலத்துப் பிரபல வித்வான்களில் பி. எஸ். ராஜா அய்யங்கார் பிரத்யேக ரகத்தைச் சேர்ந்தவர். அவர் தொண்டையின் விசித்திரத்திற்கும் ஸ்தாயி சஞ்சாரங்களுக்கும் எல்லையே கிடையாது. 14ல் சென்னையில் வழக்கம்போல் இடைவிடா மழைபோலவே கானத்தைப் பொழிந்தார். அன்று பிர்க்காப் பெருக்குடன் குஷியும் அதிகம் கிளம்பி விட்டது என்றால் கேட்கவேண்டுமா? ஆபோகி சுருக்கமா யிருந்தது. கல்யாணி, பைரவி ராகங்களை விஸ்தாரமா யளந்தார். 'நம்பிவச்சின' உருப்படியில் நிரவல் ஸ்வரங்களை வாரிக் கொட்டினார். தெய்வாதீனம் ரேடியோப் பெட்டிக்குச் சேதம் வரவில்லை என்பதைக் கண்டு சமாதானமடைந்தேன்.

16ல் திருச்சியில் வீணை வாசித்த தேசமங்கலம் சுப்ரமணிய அய்யர் பழம்பெரும் வித்வான். உயர்ந்த ஞானம் படைத்தவர். அன்று அவரது அனுபவத்துக்குத் தகுந்த நிதானம், அழுத்தம், கமகப்பொழிவு இவைகளுடன் அவரது கச்சேரி அழகாயிருந்தது. நாத நாமக்ரியா சுருக்கம் கொடுத்தது. தோடி தானம் பல்லவிகளில் தன் ஞானச் சிறப்பைக் காட்டினார். சிற்சில இடங்களில் மீட்டுக் கொஞ்சம் அதிகமாகவே கேட்டது.

12ல் .சென்னையில் கோட்டு வாத்யம் வாசித்த துரையப்ப பாகவதரும் நல்ல அநுபவம் வாய்ந்தவர். எடுத்ததும் ஹமீர் கல்யாணி ஆலாபனை ஜம் என்று காதில் விழுந்தது. காம்போதி கனிசமாயிருந்தது. எல்லாவற்றிலும் தோடி பாவப்பொழிவுடன் சுகமாய் வெளிவந்தது. மொத்தத்தில் கச்சேரி ரஞ்சகமாயிருந்தது.

* * *

11ல் திருச்சியில் வயலின் வாசித்த டி. கே. ஜயராமய்யரும் அநுபவமும், பிரபல்யமும் வாய்ந்ததோர் சீனியர் வித்வான். அன்று சங்கராபரணம் சிறப்பாயிருந்தது. உருப்படிகள் கச்சிதமாயும் ஸ்வர ப்ரஸ்தாரங்கள் அழகாயு மிருந்தன.

அன்று சென்னையில் பாடிய எம். கல்பகத்திடம் மிருதுவான குரலும் சுருதி சுத்தத்துடன் ஸரளமான உருப்படியும் ஞான பாவமும் தென்பட்டன. தன்யாசி, முகாரி ராகங்கள் எழில் நிறைந்திருந்தன. உருப்படிகளின் நிரவல் ஸ்வரங்களில் பிருகாவும், ஆங்காங்கே கொடுத்த நீண்ட கார்வைகளாலானவைகளும் மெச்சத் தக்கவை.

* * *

15ல் சென்னையில் பிற்பகலில் 1 மணி நேரம் கேட்ட பாலூர் வெங்கடராமய்யரின் கச்சேரி நல்ல பாணியுடன் விளங்கியது. மொத்தத்தில் மத்யம கால நடை. பைரவி, பேகடா ஆலாபனைகள் சுகமாயிருந்தன. இறுதியில் பாடிய ராகமாலிகை மிகச் சிறப்பா யிருந்தது.

அன்று இரவு திருச்சியில் வாய்த்த ஆர். நாராயணசாமியின் கச்சேரியும் உயர்ந்த ரகமாயிருந்தது. கரஹரப்ரியா, சங்கராபரண ராகங்களும் கடைசியில் கேட்ட ராகமாலிகையும் ஞானச் சிறப்பை விளக்கின. சங்கராபரண உருப்படியில் நிரவல் ஸ்வரங்களில் நல்ல வேலைப்பாடு காட்டினார். அன்று காலையிலும் பிற்பகலிலும் சென்னையில் பாடிய வி. சோமசுந்தரத்தின் கானமும், திருச்சியில் மாலையில் வாசித்த எல். சுசீலாவின் வீணையும் குறிப்பிடத்தக்கவை.

ஸ்ரீ முருகானந்த ஸ்வாமிகள் திருச்சமாதி மகா கும்பாபிஷேகம்

ஸ்ரீமான் பூண்டியாப் பிள்ளை என்ற பெயருடன் லயவாத்தியக் கலையில் இணையற்ற புகழ்பெற்று விளங்கிய ஸ்ரீமுருகானந்த ஸ்வாமிகள் புதுக்கோட்டையில் சமாதி அடைந்தார்கள். அன்னாருடைய திருச் சமாதியில் ஆதி லிங்க ஸ்தாபனமும் மகா கும்பாபிஷேகமும் குருநாதர்களான மிருதங்க வித்வான்கள் ஸ்ரீ பழனி முத்தையாப் பிள்ளை, அவருடைய குமாரர் ஸ்ரீ பழனி சுப்பிரமணியப் பிள்ளை இவர்களுடைய இடைவிடாத பெருமுயற்சியினால் நாளது மே மீ 4ல் காலை 8-30-க்கு மேல் 10-30க்குள் சுப லக்கினத்தில் நடைபெறுகிறது. இந்த நற்கைங்கரியத்தில் அனைவரும் கலந்துகொண்டு வைபவத்தை இனிது நடத்தித் தரவேண்டுமென்று மேற்படி பிரசித்த மிருதங்க வித்வான்கள் வேண்டிக் கொள்கிறார்கள்.

நாமக்கல் கவிஞர் நிதி


மேற்படி நிதியின் பொக்கிஷதார் ஸ்ரீ வை. கோவிந்தன் அறிவிக்கிறார்:


ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன்	500	0	0
ஸ்ரீ வி. நாடிமுத்துப் பிள்ளை	101	0	0
ஸ்ரீ ஆ. வி. க. காசி விஸ்வநாதன் செட்டியார், தேவகோட்டை	101	0	0
ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், குற்றாலம்	100	0	0
ஸ்ரீ பி. வெங்கடாசலத்தேவர், கரும்பம்பழம், ஆயக்காபுரம்	51	0	0
ஸ்ரீ ஏ. எஸ். என். சாமித்துரை, சம்புவனோடை, முத்துப்பேட்டை	51	0	0
பாரதி தமிழ்ச்சங்கம் கல்கத்தா	50	0	0
சர் சி. பி. ராமசாமி அய்யர்	50	0	0
ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணசாமி பாகவதர் அண் சன்ஸ், தஞ்சை	50	0	0
காசிவதசிசி, சரஸ்வதி வாசகசாலை, சோமவார் பேட்டை, பூனா	39	0	0
ஸ்ரீ மு. அ. மு. முத்துராமன் செட்டியார், ராயவரம்	25	0	0
திருச்சி புத்தக நிலையம்	25	0	0
ஸ்ரீ சண்முக நாடார், விருதுநகர்	25	0	0
ஸ்ரீ ஏ. ஓய். ஏ. அருணானந்த நாடார், தஞ்சாவூர்	25	0	0
ஸ்ரீ ஜி. ராமகிருஷ்ண குப்தா, சீனிவாச வாசகசாலை, திருவாரூர்	22	8	0
ஜவஹர் வாசகசாலை, சண்முகநாதபுரம்	20	0	0
ஸ்ரீ ஏ. சங்கரலிங்கம் எம்.ஏ., மரவியாபாரம், கொல்லம், திருவாங்கூர்	20	0	0
இருபது ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடைகள்	154	11	0
முன் வரவு ரூ.	3656	0	0
ஆக் மொத்தம் ரூ.	5066	3	0

கோயமுத்தூர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம் ('சுப்ரி') பின்வரும் அன்பர்களிடமிருந்து நாமக்கல் கவிஞர் நிதிக்காக வசூலித்த நன்கொடைத் தொகைகளை அனுப்பியிருக்கிறார். அவருக்கும் நன்கொடையளித்த நண்பர்களுக்கும் நமது நன்றி. தொகை ரூ. 471-ம் ஸ்ரீ வை. கோவிந்தன் (நிர்வாக ஆசிரியர், "சக்தி", ராயப்பேட்டை) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது:

ஸ்ரீ ஆர். ராதாகிருஷ்ணன்	101	0	0
ஸ்ரீ எம். ஏ. வெங்கிடராமன்	50	0	0
ஸ்ரீ சி. சுப்பிரமணியம்	50	0	0
ஸ்ரீ க. குமாரசாமி முதலியார்	35	0	0
ஸ்ரீ பி. ஏ. ராஜு செட்டியார்	25	0	0
ஸ்ரீ எஸ். நாராயணராவ் பிரதர்ஸ்	25	0	0
ஸ்ரீ எம். எஸ். கிருஷ்ணசாமி & ஜகன்னாதன்	25	0	0
ஓர் அபிமானி	25	0	0
ஸ்ரீ ஏ. என். நாயக்	25	0	0
ஸ்ரீ கே. சுப்ரி	25	0	0
ஸ்ரீ ஓய். என். ராமலிங்க கவுண்டர்	15	0	0
ஸ்ரீ சி. எஸ். வெங்கிடராமன்	10	0	0
ஸ்ரீ எம். பி. குப்புசாமி கவுண்டர்	10	0	0
ஸ்ரீ கே. என். பழனிசாமி கவுண்டர்	10	0	9
ஸ்ரீ ஆர். எம். குமாரசாமி	10	0	0
ஸ்ரீ ஆர். சுப்பராய கவுண்டர்	10	0	0
ஸ்ரீ கே. வி. காளியப்ப கவுண்டர்	10	0	0
ஸ்ரீ ஆர். ராமகிருஷ்ண நாயுடு	10	0	0
ஆக ரூ.	471	0	0







பிரின்ஸிபால் பார்த்தசாரதி அவர்களின் டுடோரியல் காலேஜ் இங்கிலீஷ் ஆசிரியர் C. S. கமலாபதியும், மாணவர்களும் திருச்சி முனிஸிபல் பப்ளிக் ஹாலிலும், மதுரை A. R. ஹைஸ்கூலிலும் ஷேக்ஸ்பியரின் Merchant of Venice ஐயும் Macbeth ஐயும் அதிவிமரிசையாக நாடக ரூபமாகச் சித்தரித்துக் காட்டின படங்களின் பகுதிகள்.

இனி என்ன கதி?

கடவுள் ஒருவர் இருக்கிறார்.

அவருடைய சித்தம் ஒன்று தனிப்பட இயங்கிக் கொண்டிருக்கிறது.

உலகத்தில் நடக்கும் காரியங்கள் எல்லாம் அவருடைய சித்தத்தின் படிதான் நடைபெறுகின்றன. அதற்கு விரோதமாக ஒரு அணுக்கூட அசையாது; ஒரு துரும்புகூட நகராது; ஒரு சிறு காரியமும் நடைபெறாது.

அகம்பாவங் கொண்ட மனிதன் 'நான் செய்கிறேன்' 'நான் செய்கிறேன்' என்று இறுமாந்து கூறித் திரிவதெல்லாம், மனிதனுடைய சிறுமைக்கும் அறியாமைக்குமே அறிகுறிகளாகின்றன.

மேற்கூறிய உண்மைகளை உலகத்துக் கெல்லாம் நன்கு எடுத்துக் காட்டிப் பசுமரத்தாணி போல் மனதில் பதியச் செய்யக்கூடிய ஒரு சம்பவம் சென்ற வாரத்தில் நடைபெற்றது.

*   *   *

ஏப்ரல் 11உ: அமெரிக்காவின் தலைநகராகிய வாஷிங்டனில் அரசாங்க மாளிகையில் பிரதான மந்திராலோசனை அறையில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கம்பீரமாக வீற்றிருக்கிறார்.

அவருக்கு எதிரில் உள்ள மேஜையைச் சுற்றி அவருடைய பிரதான காரியதரிசிகள் உட்கார்ந்திருக்கிறார்கள்.

பற்பல யுத்த முனைகளிலிருந்து வந்த கடைசிச் செய்திகள் மேஜை மீது கிடக்கின்றன. அவற்றையெல்லாம் படித்துப் பார்த்தாகி விட்டது.

பெர்லினுக்கு எந்தப் படை முதலில் போய்ச் சேரும்? — பிரிட்டிஷ் படையா, அமெரிக்கப் படையா, ருஷியப் படையா? — என்பது பற்றிச் சர்ச்சை நடக்கிறது.

பெர்லின் எந்த நாளில் பிடிபடும் என்று தர்க்கம் நடக்கிறது.

ஜெர்மனியில் யுத்தம் இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பது பற்றி வாதம் நடக்கிறது.

ஜப்பானில் அமெரிக்கப் படை இறங்குவதற்கு எது சரியான சமயம் என்பதைப் பற்றி விவாதிக்கப்படுகிறது.

ஸான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டில் என்னென்ன விஷயங்களைக் கொண்டு வருகிறது என்று கேட்கப்படுகிறது. யுத்தத்துக்குப் பிந்தி உலக சமாதான மகாநாட்டை எங்கே கூட்டுவது என்பது பற்றிப் பிரஸ்தாபிக்கப் படுகிறது.

கடைசியில், ஒருவர், ரூஸ்வெல்ட்டைப் பார்த்து, "இப்படியெல்லாம் யுத்த முடிவைப்பற்றி நாம் சர்வ சாதாரணமாய்ப் பேசுவதெல்லாம் நீங்கள் அமெரிக்கப் பிரஸிடெண்டாயிருக்கும் காரணத்தினாலல்லவா? இல்லாவிடில் உலகம் இதற்குள் என்ன கதி அடைந்திருக்கும்?" என்று கேட்கிறார்.

"ஆம்; ஆம்; அதற்கென்ன சந்தேகம்?" என்று பலர் ஆமோதிக்கிறார்கள்.

அதற்குப் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் "அப்படியொன்றும் நான் இல்லாவிட்டால் உலகம் அஸ்தமித்துப் போய் விடாது!" என்று அடக்கத்துடன் பதில் சொல்கிறார்.

"நீங்கள் சொல்வது ஜனநாயகத்துக்கு விரோதம். நீங்கள் இல்லாவிடில் உலகம் அஸ்தமித்துப் போய் விடும் என்றுதானே அமெரிக்கப் பொது ஜனங்கள் உங்களை நாலாவது தடவையாகத் தெரிந்தெடுத்தார்கள்?" என்று ஒருவர் கூறுகிறார்.

"அது உண்மைதான். நான் முன்னால் சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்" என்கிறார் ரூஸ்வெல்ட்.

"நீங்கள் இந்த யுத்தத்தை ஜயிப்பது ஒரு பெரிய காரியமல்ல. யுத்தத்திற்குப் பிறகு நிரந்தரமான சமாதானத்தை



ட்ரூமன்—இளம் வயதில்

நிலைநாட்டி உலகத்தை உருப்படும்படி செய்ய வேண்டியதுதான் மிகப் பெரிய காரியம். உங்களைத் தவிர அந்தக் காரியம் வேறு யாராலும் முடியாது" என்கிறார் ஒருவர்.

"அப்படியா?" என்று ரூஸ்வெல்ட் கேட்கிறார்.

"சந்தேகம் என்ன? நீங்கள் மட்டும் இல்லாவிட்டால், இந்தச் சர்ச்சிலும் ஸ்டாலினும் சேர்ந்து உலகத்தைக் குட்டிச் சுவராக அடித்து விட மாட்டார்களா?" என்கிறார் இன்னொருவர்.

"வாஸ்தவந்தான்!" என்று ஒப்புக் கொள்கிறார் ரூஸ்வெல்ட்.

* * *

அதே தேதியில் அதே நேரத்தில் உலகத்தின் இன்னும் பல பகுதிகளிலும் நடந்த சில பேச்சுக்களைக் கவனிக்கலாம்.

லண்டன் மாநகரில் சர்ச்சில் தமது அந்தரங்கக் காரியதரிசியிடம் சொல்கிறார்:—"ஆ! நானும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் மட்டும் இல்லாவிட்டால் இந்த உலகத்தின் கதி என்ன ஆகும்?"

வைஸ்ராய் வேவல் இந்தியா மந்திரி அமெரியிடம் சொல்கிறார்:—"இந்தியாவில் நானும் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் இருந்தோமோ, உலகம் பிழைத்ததோ! இல்லாவிடில், இந்த உலகம் என்ன கதியை அடைந்திருக்கும்?"

தோழர் ஸ்டாலின் தோழர் மொலொடாவிடம் சொல்கிறார்:— "எப்படியும் இந்தப் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டை நாம் கொஞ்சம் தழுவிக் கட்டிக் கொண்டுதான் போகவேண்டும். ருஷியாவில் நானும் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் இல்லாவிட்டால் இதற்குள் இந்த உலகத்தின் கதி என்ன ஆகியிருக்கும்?"

பாரிஸ் மாநகரில் தளபதி டிகால் தமது சொந்தக் காரியதரிசியிடம் சொல்கிறார்:—"பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் பொல்லாத மனுஷன்தான்; இருந்தபோதிலும் பிரான்ஸில் நானும் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் இல்லாவிடில் இந்த உலகம் இதற்குள் அதோகதி அடைந்திருக்கு மென்பதை நாம் மறக்கக் கூடாது."



பிரஸிடெண்ட் ட்ருமன்

மறுநாள் ஏப்ரல் மீ 12உ அதே மாளிகையில் அதே அறை: பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் நேற்று உட்கார்ந்திருந்த அதே ஆசனத்தில் இப்போதும் வீற்றிருக்கிறார். ஆனால் தோற்றத்தில் அந்தக் கம்பீரம் இல்லை; தலை தொங்கிக் கிடக்கிறது.

பிரபல டாக்டர்கள் அவரைச் சோதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அறையில் உள்ளவர்களின் முகங்களில் எல்லாம் ஒரே கவலையும் பயங்கரமும் பிரதிபலிக்கின்றன.

டாக்டர்கள் நன்றாகப் பரிசோதித்து விட்டுக் கையை விரிக்கிறார்கள். "இரத்தம் திடீரென்று தலைக்கேறி இறந்து போனார்!" என்று தெரியப் படுத்துகிறார்கள்.

அந்த அறையில் இருந்தவர்கள் அவ்வளவு பேரும் "இனி மேல் உலகத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று சொல்கிறார்கள்.

"சரி, அப்படியே ஆகட்டும்!" என்று கடவுளும் உலகத்தைக் காப்பாற்ற முன் வருகிறார்.

"பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியே நானும் உலகத்தைக் காப்பாற்றப் போகிறேன்" என்று கூறுகிறார்!

இதைக் கேட்டவர்கள் அதிசயத்துடன் திரும்பி நன்றாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தபோது, மேற்கண்டவாறு அபயப் பிரதானம் அளித்தவர் வேறு யாருமில்லை, இத்தனை நாளும் அமெரிக்காவின் வைஸ் பிரஸிடெண்டாயிருந்து, ரூஸ்வெல்ட் இறந்து போன அதே நிமிஷத்தில் புதிய பிரஸிடெண்டு ஆகி விட்ட ட்ருமன் என்று தெரிகிறது.

* * *

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் காலமான செய்தி ஒரு லட்சம் தந்திக் கம்பிகளின் மூலமாகவும் இரண்டு லட்சம் கம்பியில்லாத் தந்திகள் மூலமாகவும் உலகமெல்லாம் பறந்து செல்கிறது.

"அடாடா! இனிமேல் இந்த உலகத்துக்கு என்ன கதி?" என்று கோடிக் கணக்கான குரல்கள் எழுந்தன.

சர்ச்சிலும், ஸ்டாலினும், டிகாலும், வேவலும், — ஏன், சியாங்கை ஷேக்

ரும் கூட, — தனித்தனியே, "இனிமேல் உலகத்தின் கதி நாம் ஒருவர்தான்; தன்னந் தனியாகவே நாம் இந்த உலகத்தைக் காப்பாற்றி யாகவேண்டும்!" என்று தங்களுக்குள் தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

* * *

செந்தமிழ் நாட்டின் பொய்யா மொழிப் புலவர்,

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு"

என்று கூறினார். அதையே இன்னும் எளிய தமிழில்,

"இன்றைக்கிருந்தாரை நாளைக்கு இருப்பரென்று
எண்ணவோ திடமில்லையே!"

என்று தாயுமானவர் அருளினார்.

சாதாரணமாக மேற்படி உண்மையை நம் கண் எதிரிலே பிரத்யட்சமாகப் பார்த்து வந்த போதிலும் அது நம் மனதில் படிவதில்லை.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் போன்ற உலகமறிந்த பிரமுகர் ஒருவர் காலமாகும்போது, ஒருவாறு அது நம் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிகிறது.

"ஆஹா! இது என்ன விந்தை! ரூஸ்வெல்ட்டுக்குக் கூடவா மரணம்? அப்பேர்ப்பட்ட ஹிட்லரின் கொட்டமடக்கிய மனிதரிடமா யமன் அஞ்சாமல் அணுகினான்?" என்று வியப்புறுகிறோம்.

ஏப்ரல் 12உ இவ்வுலகிலே வாழ்ந்திருந்து மகத்தான உலக யுத்தத்தை நடத்திய மனிதர், மறுநாள் 13உ இல்லாமல் போய்விட்டாரல்லவா என்பது அழுத்தமாக நம் மனதில் படுகிறது.

ஆனால் இது விஷயம் நம்முடைய மனதில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்தால்தான் என்ன பிரயோஜனம்?

சர்ச்சில், ட்ரூமன், ஸ்டாலின், டிகால், வேவல், அமெரி முதலியவர்களுடைய மனதில் அல்லவா பதிய வேண்டும்?

அப்படிப் பதிந்ததானால், அவர்கள் சென்ற வாரத்தில் மகாத்மா காந்தி விடுத்திருக்கும் அருமையான அறிக்கையை ஊன்றிப் படிப்பார்கள். அதில் உள்ள முத்துப் போன்ற வார்த்தை ஒவ்வொன்றையும் தங்கள் கருத்தில் பதிய வைத்துக் கொள்வார்கள்.

தாங்கள் எல்லாரும் எவ்வளவு அகடவிகட அசாத்திய பிரமாத அபார கெட்டிக்காரர்கள் ஆன போதிலும், தங்களுக்கெல்லாம் மேலே கடவுள் ஒருவர் இருக்கிறார், — அவருடைய சித்தம் ஒன்று உலகத்தையும் உலகத்தின் காரியங்களையும் நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை உணர்வார்கள்.

உணர்ந்து, தற்பெருமை குன்றித் தன்னடக்கம் பெறுவார்கள்.

வெற்றிக் கர்வத்தையும் பழி வாங்கும் எண்ணத்தையும் விடுவார்கள்.

வருங் காலத்திலேயாவது உலகத்தில் யுத்த பயங்கரங்கள் ஏற்படாமலிருப்பதற்கு உண்மையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள்.

எல்லாவற்றிற்கும் முதன்மையாக, தங்களின் கீழ் சுதந்திரம் பறிக்கப்பட்டு வாழும் இந்தியா முதலிய தேசங்களுக்கு உடனே சுதந்திரத்தை அளித்து விட்டு மறு காரியம் பார்ப்பார்கள்.

ஆனால் அத்தகைய ஞானோதயத்தை மேனாட்டு இராஜ தந்திரிகளிடம் நாம் எதிர் பார்க்க முடியுமா?

"உலகத்திலே நாம் பார்க்கும் அதிசயங்களுக்குள்ளே யெல்லாம் மகத்தான அதிசயம் எது?" என்று யக்ஷன் கேட்டதற்கு, மகான் தர்ம புத்திரர்,


"தினந்தோறும் மனிதர்கள் இறப்பதை மற்ற மனிதர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், தாங்கள் என்றும் சாசுவதமாக இருக்கப் போவதாய் நினைத்துக் கொண்டு காரியம் செய்கிறார்கள். இதுதான் எல்லா அதிசயத்திலும் பெரிய அதிசயம்!" என்றாராம்.

தர்ம புத்திரர் மேற்படி அதிசயத்தைக் கண்டு பிடித்து வெளியிட்ட பிற்பாடும், இவ்வுலகில் அது நடந்து கொண்டுதானிருக்கிறது!

எனவே, பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் திடீர் மரணத்தைப் பார்த்த பின்னரும், அதனால் எந்த விதமான மனமாறுதலும் இல்லாமல், உலகத்து இராஜ தந்திரிகள் பழைய போக்கிலேயே போய்க்கொண்டிருந்தால், அதை ஒரு அதிசயம் என்று சொல்ல முடியுமா? முடியாதுதான். அவர்களுக்கு அத்தகைய மனமாறுதல் ஏற்பட்டு, நல்ல புத்தி உதயமாகி, மகாத்மா காந்தியின் யோசனைப்படி காரியம் செய்யத் தொடங்கினார்களானால், அது தான் மகத்தான அதிசயமாயிருக்கும்!

வங்கக் கவியும் தமிழ்க் கவியும்

[கோயமுத்தூர் என். லக்ஷ்மணன்]



"நாம் ஒருவரை யொருவர் அனுசிதமாகவும் அகௌரவமாகவும் தாக்கிக் கொண்டு பொது ஜனங்களுக்கு ஒருவரிடமும் மதிப்பில்லாமல் செய்து விடுகிறோம்" என்று தாங்கள் எழுதியதை இந்த வாரத்திய கல்கியில் படித்தேன். "தமிழுக்கு நோபல் பரிசு" என்கிற தலைப்பில் ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் சென்ற இதழில் எழுதியது உடனே என் ஞாபகத்துக்கு வந்தது. பொது ஜனங்களிடம் வீண் குழப்பம் ஏற்படக் கூடாது. கோழிச் சண்டை அரசியல் துறைக்கு ஒருவாறு பொருந்தலாம். கலை உலகத்தில் குயில் சண்டைகூட ஆபத்தானது!

மகாகவி தாகூருக்கு நோபல் பரிசு கிடைத்த பிறகு, ஸர் சி. வி. இராமன் அவர்களுக்கும் அப்பரிசு கிடைத்தது. அதைக் கேட்டு, தாகூர் இன்புற்றார். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் காலத்தில் இம்மாதிரி ஏற்பட்டிருந்தால், ஒரு தமிழ்ப் பெரியாருக்குக் கிடைத்த வெற்றியைக் குறித்து ஆறுதலடைந்திருப்பார். "கிடக்கிறது நோபல் பரிசு" என்று ஒருவித மனப்பான்மையுடன் தமிழ்க்கவி சொல்லியதையே வங்கக் கவியும் ஆமோதித்தார் என்று உறுதி கூற விரும்புகிறேன். ஏனென்றால், தாகூருடன் நேரில் முப்பது வருட தொடர்பு கொண்ட தமிழர்களில் அடியேனும் ஒருவன். மூன்று தடவைகளில் அவருடன் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.

தாகூர் ஒரு பெரிய தமிழ் அன்பர். கம்பர், திருவள்ளுவர், இளங்கோ முதலியவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்தவர். தமிழிலுள்ள பக்தி நூல்கள் நிகரற்றவை என்பதை வெகு தாராளமாக ஒப்புக் கொண்டவர். சைவ சித்தாந்தம் அவருக்கு நன்றாய்த் தெரியும். திருநெல்வேலியில் எட்டயபுரம் மாளிகையில் 1922-ம் ஆண்டில் தாகூர் சில நாட்கள் தங்கியிருந்தபோது, ஒரு தமிழர் வங்க மொழியில் 'வந்தே மாதரம்' பாட முன் வந்தார். அதைப் பாடாமல் பாரதியாரின் செந்தமிழ் நாடு பாடக் கேட்ட பிறகே, தாகூர் திருப்தி யடைந்தார். "எனது வங்க ஹிருதயம் வங்கத்திலேயே பாடும்; தமிழ் ஹிருதயம் தமிழிலேயே பாடுவது நல்லது. குயிலுக்குத் தன் பாட்டுத்தான் பொருத்தமாகும். குயில் கிளியை அபிநயித்தல் பொருந்தாது" என்று தமிழ் நாட்டில் அடிக்கடி அவர் சொன்னார். பிறகு "தகுந்த புலவர் கிடைத்தால் தமிழுக்கும் சாந்தி நிகேதனில் ஒரு பவனம் அமைக்கலாம்" என்று 1919-ம் ஆண்டில் மதுரையில் ஸ்வாமி சுத்தானந்த பாரதியாரிடம் தாகூர் சொன்னார். தமிழுக்கு இது ஒரு பெருமிதமான வெற்றியல்லவா?

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாருக்குத் தாகூரிடத்தில் விசேஷ மதிப்பு உண்டு. பாரதியாரால் மொழி பெயர்க்கப்பட்ட தாகூரின் ஐந்து கட்டுரைகள் புத்தக ரூபமாய் வெளிவந்துள்ளன. பாரத நாட்டியக் கலை புத்துயிர் பெற வேண்டுமென்று பாரதியார் சொல்லக் கேட்டேன். அதையே தாகூரும் வற்புறுத்தியதோடு, சிறந்த வழியும் காட்டியுள்ளார். ஆகவே, தமிழ் மறுமலர்ச்சியானது வங்காள மறுமலர்ச்சியைப் போல உணர்வில் பெரிது. அப்படியிருக்க நமக்கென்ன குறைவு இருக்க முடியும்? கிடக்கிறது நோபல் பரிசு!

[தமிழையும் தமிழ் நாட்டையும் குறித்துத் தாகூர் கொண்டிருந்த நன்மதிப்பை வெளியிட்டதின் பொருட்டு மேற்படி கட்டுரை ஆசிரியருக்கு நமது நன்றி. வங்க மகா கவியிடம் நமது நன்மதிப்பு அளவற்றது. ஸ்வாமி சுத்தானந்த பாரதியாரின் "தமிழுக்கு நோபல் பரிசு" என்ற கட்டுரையில் தாகூரைப் பற்றி எவ்விதத்திலும் குறை கூறப்படவில்லையென்று நாம் உறுதி கூறுகிறோம். அப்படித் தாகூரைக் குறைவு படுத்தும் கட்டுரை எதையும் நாம் வெளியிட்டிருக்க மாட்டோம். ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் தமிழினிடத்தும் தமிழ் நாட்டைக் குறித்தும் கொண்டிருந்த பெருமித மனப்பான்மைதான் அக்கட்டுரையிலிருந்து வெளியாகி யிருப்பதாக நாம் கருதுகிறோம். —ஆசிரியர்]

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஆர். சங்கரநரசிம்மன், நெ. 3, குளத்துத் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை.



ருக்மிணி

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

விதர்ப்ப தேசாதிபதி பீஷ்மகனுக்கு ஐந்து குமாரர்களும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். அழகிலும் குணத்திலும் ஒப்பற்ற இந்தப் பெண்ணின் பெயர் ருக்மிணி. கிருஷ்ணனைப்பற்றி உலகமெல்லாம் புகழ்ந்ததைக் கேட்டு ருக்மிணிக்கு அந்த வீரனை மணந்து இல்லறம் நடத்தவேண்டும் என்ற ஆவல் வளர்ந்தது. பந்துக்கள் அனைவரும் இந்த எண்ணத்தையே ஆமோதித்தார்கள். ஆனால் பீஷ்மகனுடைய மூத்த குமாரனும் இளவரசனுமான ருக்மன் என்பவன் கண்ணனைத் துவேஷித்தான். அவன் ருக்மிணியைத் துவாரகாதிபதிக்குக் கொடுக்கக் கூடாது, அவளைச் சேதி தேசத்து ராஜனான சிசுபாலனுக்கு விவாகம் செய்து முடிக்க வேண்டும் என்று தகப்பனாரை வற்புறுத்தி வந்தான். தகப்பனார் வயதானவரான படியால் இளவரசன் பேச்சே வலுத்தது. சிசுபாலனுக்கே ருக்மிணியைக் கொடுத்து விவாகம் முடியும் போல் இருந்தது.

கண்ணனை விரும்பினவளும் ஸ்ரீ தேவியின் அவதாரமுமான ருக்மிணி அசுர குணம் படைத்த சிசுபாலனை எவ்வாறு ஒப்புக் கொள்ளுவாள்? தகப்பனார் தன்னைக் காப்பாற்ற மாட்டார் என்றும் பிடிவாதக்காரனான ருக்மனின் உத்தேசமே வெற்றியடையும் என்றும் அவள் பயந்து மிக்கத் துயரப்பட்டாள்.

பிறகு ஒருநாள் ருக்மிணி தைரியம் செய்துகொண்டு தன் துயரத்தினின்று மீள்வதற்கும் தீராத துன்பத்தினின்று தப்புவதற்கும் ஒரு வழி எப்படியாவது தேட வேண்டுமென்று தீர்மானித்தாள். அதைப்பற்றி ஒரு பிராமணனுடன் ஆலோசனை செய்தாள். கிருஷ்ணனிடம் போய்த் தன் நிலைமையைச் சொல்லி எப்படியாவது தன்னைக் காப்பாற்றும் படியாக அவனை வேண்டிக் கொள்ளச் சொல்லி அந்தப் பிராமணனைத் துவாரகைக்கு அனுப்பினாள்.

பிராமணன் துவாரகைக்குப் போய்க் கண்ணபிரானைக் கண்டு ருக்மிணியின் பரிதாபத்தையும் வேண்டுகோளையும் அவனுக்குத் தெரிவித்து ருக்மிணி அனுப்பிய கடிதத்தையும் பகவானிடம் தந்தான். "உன்னை நான் வரித்தேன். என் உள்ளம் உன்னுடைய சொத்தாகி விட்டது. உனக்குச் சொந்தமாகச் சேர்ந்துவிட்ட பொருளைச் சிசுபாலன் வந்து கவர்ந்து கொள்வதற்கு முன்னமே நீ இவ்விடம் வந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். நாளைய தினமே இவ்விடம் வரவேண்டும். சிசுபாலனுடைய படைகளையும் ஜராசந்தனுடைய படைகளையும் எதிர்த்துச் சிதற அடித்து என்னை நீ பெற வேண்டியதாயிருக்கிறது. வீரனாக என்னை அடைவாய். சிசுபாலனுக்கு என்னை விவாகம் செய்து விடுவதாக அண்ணன் தீர்மானித்திருக்கிறான். விவாகச் சடங்குக்குச் செய்ய வேண்டிய தேவி பூஜைக்காக அம்மன் கோயிலுக்கு என் பரிவாரத்துடன் போவேன். நீ அப்போது வந்து என்னை

மீட்டலாம். இல்லையேல் நான் உயிரை மாய்த்துக் கொள்வேன். மறு பிறப்பிலாவது உன்னை அடைவேன் அல்லவா?'' —இந்தக் கடிதத்தைப் படித்த உடனே கிருஷ்ணன் தேரில் ஏறினான்.

• • •

விதர்ப்ப தேசத்தின் ராஜதானியான குண்டினபுரம் அலங்கரிக்கப்பட்டு ருக்மிணியின் விவாகத்திற்கு வேண்டியதெல்லாம் பீஷ்மக ராஜனுடைய கட்டளைப்படி தயார் செய்யப்பட்டது. சிசுபாலனும் அவனைச் சேர்ந்தவர்களும் வந்து சேர்ந்து விட்டார்கள். அனைவரும் கிருஷ்ணனுடைய பரம விரோதிகள்.

• • •

கண்ணன் தனியாகத் தேர் ஏறிச் சென்ற செய்தி பலராமனுக்குத் தெரிந்தது. இது, விதர்ப்ப ராஜனுடைய மகளைப் பற்றியதாகவே இருக்கலாம், தம்பி கண்ணன் அவ்விடம் போய் ஜன்ம விரோதிகளால் சூழப்பட்டு அபாயத்தில் சிக்கிக்கொள்வான் என்று பலதேவன் கவலைப்பட்டு உடனே பெருஞ்சேனையை அவசரமாகத் திரட்டிக் கொண்டு குண்டினபுரத்துக்கு விரைவாகச் சென்றான்.

• • •

ருக்மிணி அந்தப்புரத்தை விட்டுப் புறப்பட்டாள். பரிவாரமும் படையுமாகப் பெருங்கூட்டம் அவளுடன் சென்றது. கோயிலுக்குப் போய் விவாகத்துக்காகத் தேவி பூஜை நடத்தினாள். ''தேவி! உன்னை வணங்குகிறேன். நான் எவ்வளவு காலமாக உன்னைப் பணிந்து வந்திருக்கிறேன்? கண்ணன் என்னை அடையவேண்டும். எனக்கு இந்த வரம் நீ தரவேண்டும்'' என்று உள்ளம் கரைந்து தேவியின் சந்நிதியில் முறையிட்டாள்.

ஆலயத்திலிருந்து ருக்மிணி வெளியே வந்ததும் கண்ணனுடைய தேரைக் கண்டாள். கண்டதும் காந்தத்தினால் இழுக்கப்பட்ட ஊசியைப்போல் ஒன்றும் பேசாமல் நேராகப்போய் அந்தத் தேரில் ஏறினாள். பகைவர்கள் பார்த்துக் கொண்டிருக்கக் கண்ணன் அவளை ஏற்றிக் கொண்டு தேரை ஓட்டினான்.

• • •

இளவரசன் ருக்மனுக்கு சேவகர்கள் ஓடிச் சென்று நடந்ததைச் சொன்னார்கள். ''ஜனார்த்தனனைக் கொல்லாமல் திரும்ப மாட்டேன்'' என்று அவன் சபதம் செய்து பெருஞ் சேனையைத் திரட்டிக் கிருஷ்ணனைத் துரத்திக் கொண்டு சென்றான். இதற்குள் பலராமனும் சேனையுடன் வந்து சேர்ந்தான். இரு கட்சியினருக்கும் பெரும் யுத்தம் நடந்தது. பலராமனும் கண்ணனும் பகைவர்களைச் சிதற அடித்து வெற்றியுடன் துவாரகைக்குச் சென்றார்கள். அங்கே ருக்மிணியின் விவாகம் முறைப்படி நடந்தது.

• • •

தோல்வியை அடைந்த ருக்மன் வெட்கத்தால் பீடிக்கப்பட்டுக் குண்டினபுரத்துக்குத் திரும்பிப் போகாமல் கிருஷ்ணனுக்கும் தனக்கும் யுத்தம் நடந்த இடத்திலேயே தன் சேனையை நிறுத்தி அவ்விடத்தில் போஜகடம் என்கிற புதிய நகரத்தை நிர்மாணம் செய்து அங்கேயே ராஜ்யத்தை நடத்தி வந்தான்.

• • •

குருக்ஷேத்திரத்தில் யுத்தம் நடைபெறப் போகிறது என்று அறிந்து ருக்மிராஜன் ஒரு அக்குரோணி சேனையுடன் அவ்விடம் வந்தான். வாசுதேவ

அன்னையின் அத்தாட்சி

''பாப்பா மலர் எங்கள் கற்பனையில் உதித்ததைவிடப் பன் மடங்கு அழகும், இனிப்பும் நிறைந்து விளங்குவதைக் காண மகிழ்கிறோம். என் குழந்தைகள் அதை விட்டுப் பிரிய ஒரு க்ஷணமும் மனமின்றி, தூங்கும்பொழுதும், சாப்பிடும்பொழுதும், விளையாடும்பொழுதும் எப்பொழுதும் கையும் புத்தகமுமாகவே இருக்கிறார்கள்.''

பெங்களூர்,
8—3—45.

ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்.

னுடைய நட்பை இப்போது அடையலாம் என்று எண்ணிப் பாண்டவர்களிடம் சென்றான். தனஞ்சயனைப் பார்த்து "பாண்டவனே! உன்னுடைய எதிரிகளின் சேனை பெரிதாக இருக்கிறது. உனக்குச் சகாயம் செய்ய வந்திருக்கிறேன். எதிரிகளுடைய படையில் எந்த பாகத்தைத் தாக்க வேண்டுமென்று விரும்புகிறாயோ அதை நான் தாக்குவேன். துரோணர், கிருபர், அல்லது பீஷ்மரையும் தாக்க நான் சக்தியுள்ளவனாக இருக்கிறேன். உனக்கு வெற்றியைச் சம்பாதித்துத் தருவேன். உன் விருப்பம் என்ன?" என்று கேட்டான் ருக்மனுடைய பேச்சைக் கேட்ட தனஞ்சயன் வாசுதேவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு பதில் சொன்னான்.

"போஜகடாதிபதியே! நாம் எதிரிகளின் பெரிய சேனையைக் கண்டு பயப்படவில்லை. உன்னுடைய சகாயத்தை நாம் விரும்பவில்லை. நீ போகலாம், அல்லது இருக்கலாம்" என்றான்.

கோபமும் வெட்கமுமடைந்து ருக்மன் தன் சேனையைத் திருப்பிக் கொண்டு உடனே துரியோதனனிடம் போனான்.

"பாண்டவர்கள் என்னை மறுத்தார்கள்; உனக்குச் சகாயம் செய்வேன்" என்று துரியோதனனிடம் சொன்னான்.

"பாண்டவர்கள் வேண்டாம் என்று சொன்னபின் அல்லவோ என்னிடம் வந்தாய்? அவர்கள் நீக்கிவிட்ட பண்டத்தை எடுத்துக் கொள்ளும்படியான அவசியம் எனக்கு நேரவில்லை" என்று துரியோதனனும் சொல்லி விட்டான்! இருதரப்பிலும் அவமானப்பட்ட ருக்மன் யுத்தத்தில் சேராமல் தன் நாட்டுக்குத் திரும்பினான்.

* * *

தருமத்தை ஆராய்ந்து எது செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ அதைச் செய்யாமல் தன் பெருமையையே லட்சியமாகக் கொண்டு ருக்மன் இவ்வாறு அவமானப்பட்டான். யுத்தத்தில் சேராமலிருப்பதிலும் பலவிதம் உண்டு. ஸாத்விக காரணங்களாகவுமிருக்கலாம். ரஜோ குணங்கள்—அதாவது அகம்பாவம், சுயநலம் முதலிய காரணங்களாகவுமிருக்கலாம். சோம்பல், பயம் முதலிய தாமஸ காரணங்களாகவுமிருக்கலாம். பலராமன் பாரத யுத்தத்தில் சேராத காரணம் ஸாத்விகம். ருக்மன் சேராததற்குக் காரணமோ அவனுடைய ரஜோகுணம்.



"ஐயோ! ஐயோ! அதோ பாருங்கோ, பசங்கள் கத்திச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறதை!"




"அடடா! எங்கேயாவது காயம் கீயம் பட்டுத் தொலைக்கப் போகிறதே!"




"குழந்தைகள் கத்திச் சண்டை போடுகிறார்களென்று எதற்காகப் பொய்சொன்னாய்?"

"ஆமாம்; ஒரே கத்தலாகக் கத்தித்தான் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்!"



ஆகாரவகை அதிக விலையுள்ளதாக இருக்கிறது

ஆனாலும் எப்பொழுதும் கிடைக்கக் கூடியதும் மலிவானதும் ஒன்று இருக்கிறது. அதுதான் டீ. யுத்தத்தால் ஏற்படும் கவலைகள் எதுவாகிலும்— ஆகாரம், எரிகரும்பு, துணி வகை, நீங்கள் எப்பொழுதும் நன்கு தயாரித்த ஒரு கோப்பை டீ அருந்தி ஆறுதல் பெறலாம். நீங்கள் களைப்புற்றோ, கவலையுடனோ இருந்தாலும் சரி ஒரு கோப்பை டீ அருந்துங்கள். அது கிளர்த்தும், ஆனால் கெடுதல் செய்யாது. அதை ஒரு நண்பனாக கருதி எப்பொழுதும் உங்களுடன் வைத்திருங்கள். அதி காலை முதல் இரவு வெகுநேரம் வரை எந்த சமயமும் நீங்கள் டீ அருந்த சித்தமாய் இருப்பீர்கள்.



இந்தியன் டீ

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் கெஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.



இரண்டாவது கடிதம்

என். அலமேலு

அஸ்தமன வேளை. இன்னும் விளக்கு வைக்கவில்லை. மங்கிய வெளிச்சத்தில் மாடியறையில், புஸ்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். ஜன்னல் வழியாக வீதியில் விளையாடும் குழந்தைகளைக் கவனிப்பதும், சற்றுப் புத்தகத்தைப் புரட்டுவதுமாகக் காலங் கழித்தேன். என் மனம் எதிலும் லயிக்கவில்லை. கவலையற்று உற்சாகமாய் விளையாடும் குழந்தைகளின் கூக்குரல் என் காதைத் துளைத்தது. என் சங்கடத்திற்காக ஊரைக் கட்டுப்படுத்த இயலுமா?

எனக்கும் தலை தீபாவளி வந்தது. தலை தீபாவளிக்கு ஆதி காரணமான என் விவாகத்தைப் பற்றி பல்லவா முதலில் சொல்ல வேண்டும்! கலியாணத்திற்கு முன் என்னைப் பார்க்க எவரும் வரவில்லை. அவ்வளவு தொலைவிலிருந்து பெண் பார்க்க வருவதென்பது எப்படிச் சாத்தியமாகும்? அதனால் என்னைப் போட்டோ பிடித்தார்கள். என்னை நேரில் பார்த்தவர்களுக்குப் போட்டோவைப் பார்த்தால் ஆச்சரியமாய்த் தானிருக்கும்! என் முகம், போட்டோவில் சுமாராய் விழுந்திருந்தது. குச்சிபோல் மெலிந்திருக்கும் என் தேகம் என் அம்மாவின் 'கூறை'ப் புடவையால் பார்ப்பதற்குச் சற்றுக் கணிசமாயிருந்தது.

விவாககாலம் நெருங்க, நெருங்க என் மனம் ஏதோ ஒரு திகிலினால் நடுங்கத் தொடங்கியது.

என்னைப் பார்க்கும் பந்து மித்திரர்கள், "இந்தப் பெண் யாரைக் கொண்டு பிறந்திருக்கிறது? இதுமாதிரி இந்தக் கூட்டத்திலே யாருமில்லையே!" என்று மூக்கின்மேல் விரலை வைத்து அதிசயித்தனர். கறுப்பாக, வசீகரமற்ற என் முகம் எனக்கே வெறுப்பையளித்தது. உடம்பாவது 'தக்கத்தனிய' இருக்கிறதா? அதுவும் இல்லை. எனக்குப் படிப்பில் ஆர்வமதிகம். ஏதோ கொஞ்சம் சங்கீதமும் தெரியும். விவாக தினத்தன்று என் உள்ளம் பட்டிருக்கும் பாட்டை ஆண்டவனே யறிவான். மாப்பிள்ளை ஏதோ தகராறு பண்ணுகிறாரென்று என் தோழிகள் எனக்குச் சொன்னார்கள்.

சம்பந்தி வீட்டுச் சண்டைகளை ஸ்வாரஸ்யமாய்க் கவனிக்கும் வழக்கமுடைய எங்கள் தூரபந்துவான ஒரு அம்மாள் என் தாயாரிடம் வந்து, "அந்தப் பிள்ளை என்னமா இப்படிக் குதிக்கிறான்? 'பெண் கொஞ்சங்கூட நன்றாயில்லை, ஏன் இந்த இடத்தை நிச்சயம் செய்தீர்கள்?' என்று இரைகிறான். அந்தப் பிள்ளையின் அப்பாவும், என்னென்னவோ சொல்லிச் சமாதானப் படுத்துகிறார்கள்" என்று விவரித்தாள். என் தாய்க்கு மிகவும் துக்கமாய்த்தானிருந்தது.

ஒருவிதமாக என் விவாகம் முடிவடைந்தது. அதற்குப் பிறகு என் கணவரிடமிருந்து ஒரு கடிதமும் வரவில்லை. என் தகப்பனார் க்ஷேம சமாசாரங்களைப் பற்றி விசாரித்ததற்கும் பதில் போடவில்லை.

சிறுகதைப் போட்டிக்கு வந்த கதைகளில் பிரசுரத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளில் இதுவும் ஒன்று. 'என் கதை' என்று போட்டிருந்த கதைதான் 'இரண்டாவது கடிதம்' என்ற தலைப்பில் இங்கே வெளியாகி யிருக்கிறது.

ஆடிப் பண்டிகை. அது, இது என்று ஒன்றும் நடக்கவில்லை. தீபாவளிக்கு ஒரு மாதம் முந்தி என் புக்ககத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், அவர்கள் பிள்ளைக்கு உடம்பு சரியில்லையென்றும், உடம்பு சரியானால் தீபாவளிக்குப் பிள்ளையை அழைத்துக்கொண்டு வருவதாகவும் எழுதியிருந்தார்கள். என் பெற்றோர்களுக்குச் சொல்ல முடியாத சந்தோஷம்.

தீபாவளிக்கு முதல் நாள் எல்லோரும் வந்து சேர்ந்தனர். என் கணவரைப் பார்த்தால், ஏதோ தாய் தந்தையரின் வலுக்கட்டாயத்தின் பேரில் வந்திருப்பதுபோல் தோன்றியது. ஏதோ பறிகொடுத்தவர் மாதிரி 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டிருந்தார். வலுவிலே என் தகப்பனார் இழுத்து வைத்துப் பேசுவதற்காகக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் தாயார் என் தாயாரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள், "அவனுக்கு இங்கே வரக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. எங்கள் தொந்தரவு பொறுக்காமல் வந்திருக்கிறான்" என்று.

இப்படிச் சொல்வது அவர்களுக்கு ஒரு வேளை பெருமையாகவும், கௌரவமாகவும் இருக்கலாம். ஆனால், இவ் வார்த்தைகள் என்னை எவ்வளவு தூரம் பாதித்திருக்குமென்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்?

தீபாவளியன்று, எல்லோரும் கங்கா ஸ்நானம் செய்தாயிற்று. ஒரு வெள்ளித் தட்டில் பட்சணத்தை வைத்து, "இதைக் கொண்டு போய் மாப்பிள்ளையிடம் கொடு!" என்று என் தாயார் என்னிடம் கொடுத்தாள். மாப்பிள்ளை மாடி யறையில் உட்கார்ந்திருந்தார். அம்மா சொன்னதும் எனக்குத் 'திக்'கென்றது. இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. கண்ணாடியின் முன் போய் நின்று என்னை அலங்கரித்துக் கொண்டேன். பட்சணத் தட்டை எடுத்துக் கொண்டு, மாடியறைக்குச் சென்றேன்.

அங்கே சாய்வு நாற்காலியில் அவர் சாய்ந்து கொண்டிருந்தார். யாரோ வரும் சப்தம் கேட்கவே என் பக்கம் நோக்கினவர், ஏதோ காணக் கூடாத ஒன்றைக் கண்ணுற்றவர்போல் முகத்தைச் சுளித்துக் கொண்டு வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். அளவிலா அவமான மடைந்தேன் நான். புன் சிரிப்புடன் வரவேற்க வேண்டிய இடத்தில் எவ்வளவு கொடூரமான திரஸ்கரிப்பு! அருகிலிருந்த 'ஸ்டூலி'ல் தட்டை வைத்து விட்டு, "பட்சணம் வைத்திருக்கிறேன்!" என்று தட்டுத் தடுமாறிச் சொல்லவும் சொல்லி விட்டேன்.

"வேண்டாம்!" என்று அழுத்தம் திருத்தமாய் ஒரே வார்த்தையில் பதில் வந்தது. என்னை யறியாமல், எனக்குக் கோபமும், அழுகையும் வந்து விட்டது. பட்சணத் தட்டை அப்படியே வைத்து விட்டு விடு, விடுவென்று கீழே இறங்கி விட்டேன்.

அழுது, அழுது என் கண் வீங்கியிருந்தது. அம்மா, காரியங்களையெல்லாம் முடித்துக்கொண்டு ரகசியமாய் என்னை யழைத்து என்ன விஷயமென்று கேட்டாள். நான் நிகழ்ந்தவற்றைச் சொன்னேன். அம்மா சற்று நேரம் பேசாமலிருந்தாள். பிறகு, எனக்குப் புத்தி சொல்லத் தொடங்கினாள். "இது என்ன பிரமாதம்? இதுக்காக இப்படி மூஞ்சி வீங்கும்படி அழுவார்களா? புதிதில் அப்படித்தானிருக்கும். பிறகு நாளாக ஆக வழிக்கு வந்துவிடும். இன்னும் எத்தனையோ முரடுகளெல்லாம் வழிக்கு வந்துவிட வில்லையா? உங்க அப்பா இப்பொழுது எப்படி இருக்கிறார்? ஆதியில் இவரைப் பார்க்கணுமே! இவர் வீசகம், வீறாப்பும், அடேயப்பா!" என்று சொல்லி விட்டுச் சற்று சும்மா யிருந்தாள். அத்தனை பொல்லாத அப்பா இப்பொழுது எவ்வளவு சாதுவாக இருக்கிறார்! அம்மா சொன்னபடி கொஞ்ச நாளில் இவரும் திருந்திவிடுவார் என்று எண்ணிச் சந்தோஷமடைந்தேன்.

ஆனால், என் விதி வேறாயிருக்கிறதே! மத்தியானமாயிற்று: டிபன், காப்பி



கொண்டு போய்க் கொடுப்பதற்காக அம்மா என்னை அலங்கரித்துக்கொள்ளச் சொன்னாள். அம்மா ஒரு தட்டில் பக்ஷணத்தை எடுத்து என் கையில் கொடுத்து, "இதைக் கொண்டு போய்க் கொடு!" என்றாள். நான் பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு, "இந்தப் புடவை எனக்கு நன்றாயிருக்கிறதா, அம்மா?" என்றேன் உடைந்த குரலில். "நன்றாயில்லாமலென்ன? எல்லாம் நன்றாயிருக்கிறது! இதை வைத்துவிட்டு ஓடிவந்து விடாதே! அவராகப் பேசாவிட்டாலும் 'உடம்பு தேவலையா?' என்று கேள்! பயப்படாமல் போ!" என்று என்னைத் தூண்டினாள்.

கொலைக்களத்திற்குச் செல்லும் குற்றவாளியைப்போல் நிராசையான மனதுடன் மாடிக்குச் சென்றேன். அவர் நான் வந்ததை அறிந்தும் அறியாதவர்போல் புத்தகம் படிக்கும் பாவனையிலிருந்தார். தட்டை வைத்துவிட்டுச் சற்றுத் தயங்கி நின்றேன். அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ளச் சிரமப்பட்டு அம்மா சொன்னபடி "உடம்பு தேவலையா?" என்று கேட்டுவிட்டேன். இதைக் கேட்பதற்குள் என் உயிரே போய் வந்தது. எங்கிருந்தோ கிணற்றிலிருந்து வார்த்தை வருவது போலிருந்தது. நான் கேட்டதற்கு வந்த பதில் என் உயிரையே எடுத்துச்சென்றிருக்கலாகாதா! "என் உடம்பிற்கென்ன? எல்லாம் சரியாய்த் தானிருக்கிறது! உன்னைப் பார்த்தால்தான் ஜான்டியாய்ப் போய்விடுகிறது!" என்றது அந்த ருத்ரமூர்த்தி! என் உள்ளமுடைந்து, உயிர் துடித்தது. அவமானத்தால் உடல் குன்றியது. என்னையறியாமல் கண்ணீர் பெருகியது. நான் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை.

நாலை தீபாவளி கழிந்து சென்றது. அவர்களிடமிருந்து எவ்விதமான தகவலும் கிடைக்கவில்லை. அப்பா, மாப்பிள்ளைக்கு வரிந்து வரிந்து கடிதம் எழுதுவார். ஆனால் அவர் கண்ட பலன் கை வலிதான். நாட்கள் சென்று கொண்டிருந்தன. ஓர் உபாத்தியாயரை வைத்துப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும்படி செய்தனர். சங்கீதத்தையும் விருத்தி செய்வித்தனர். நானும் சந்தோஷமாயிருக்க முயன்றேன். பொழுது போய் புலர்கின்றது. ஆனால் என் வாழ்க்கையின் பொழுது புலரவில்லையே? எதைக் கண்டாலும் வெறுப்பேயிருந்தது. அம்மா ஒரு நாள்



"உங்க அப்பா எழுதி, எழுதி ஒன்றும் பலனில்லையே. நீ ஒரு கடிதம் எழுதிப் போடு!" என்றாள். நானும் முதல் தடவையாக — ஏன்? கடைசித் தடவையும் இதுதான் — கடிதம் எழுதலானேன். என் மனத்தில் என்னென்ன தோன்றியதோ அவைகளையெல்லாம் எழுதிவிட்டேன்.

"நமஸ்காரம். க்ஷேமம்; க்ஷேமத்திற்குப் பதில் போடவும். தலை தீபாவளிக்கு வந்து சென்ற பிறகு உங்களிடமிருந்து கடிதமே கிடைக்கவில்லை. கடவுளருளால் நீங்கள் சௌக்கியமாயிருக்கிறீர்களென்று நினைக்கிறேன். தாங்கள் ஒரு வரி கூடக் கடிதம் போடாமலிருந்தும்கூட நான் துணிந்து எழுத முன் வந்து விட்டேன். நான் குரூபியாயிருக்கிறதனால் என்னைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் என்னை நீங்கள் உதாசீனம் செய்துவிட்டீர்கள். லட்சணமாயும், அவலட்சணமாயும் பிறப்பது நம் கையிலில்லை என்பது எவ்வளவோ படித்த தங்களுக்குத் தெரிந்துதானிருக்கும்.

அழகுள்ளவளாய் எல்லோர் மனதையும் கவரும்படியாயிருக்கவேண்டுமென்பதுதான் என் ஆவல். ஆனால், சசியின் கருணைக்குப் பாத்திரமானவளாய் நான் பிறக்கவில்லை. என் மேனி பொலிவில்லாமலிருக்கலாம்; ஆனால்,

என் உள்ளம் அந்தந்த வயதிற்குகந்த எண்ணங்களைக் கொண்டதாயிருக்கின்றது. அப்படியே, ரூபவதியான மனைவியைத் தாங்கள் மணந்து கொண்டிருந்தாலும் ஏதேனும் நோயால் பீடிக்கப்பட்டு அழகு குறைந்து விட்டால் அதற்காக அவளைத் தள்ளிவிடுவீர்களா?

தயவு செய்து என் கஷ்டத்தை அறிந்து கொண்டு என்னை அழைத்துப்போக ஏற்பாடு செய்யவும். இதற்குப் பதிலும் உடனே போடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.''

இவ்வளவுதான் நான் எழுதினேன். இதற்கு மேல் விஸ்தரித்தோ, இல்லை, உருகியோ எழுத எனக்குப் பிடிக்கவில்லை. அம்மா சொல்லிக் கொடுத்த பிரகாரம் எழுதினால் நாவல்களில் வரும் கடிதங்களைப் போலிருக்கும். என்னவோ அதுமாதிரி எழுத எனக்குப் பிடிக்கவில்லை.

நான் எழுதி ஒரு வாரத்திற்கெல்லாம் ஒரு கவர் வந்து சேர்ந்தது. அதில் பின்வருமாறு வரைந்திருந்தது:

"உன் கடிதம் கிடைத்தது. நீ சொல்வதுபோல், ரூபமும், குரூபமும் கடவுள் கையிலிருக்கிறதென்று நானும் அறிவேன். ஆனால், அதற்காக என் ஆவலை நான் பலியிடத் தயாராயில்லை. நான் நினைத்திருந்த, என் 'கற்பனா மனைவி'க்கும், என்—உன் பெற்றோர்களால் ஏற்படுத்தப்பட்ட உனக்கும் எவ்விதப் பொருத்தமுமில்லை. எனக்கு உன்மீது அநுதாப மேற்படுகிறதே யொழிய அன்பென்பது என்னளவுமில்லை.

மற்றப்படி நீ கேட்டிருக்கும் கேள்விக்கு நான் பதில் சொல்லத் தயாராயில்லை. இனிமேல் கடிதம் எழுதி என்னைத் தொந்தரவு செய்யாமலிருக்கும்படி உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
ராஜு."

இத்துடன் கடிதம் முடிவடைந்தது. மேஜையில் கடிதத்தை எறிந்தேன். என்னை



"விபீஷணர் என்றும் யார் தெரியுமா. இல்லையோ?"

"என்ன ஸ்வாமி! மகாபாரதத்திலேயும் பாகவதத்திலேயிருந்தும் எனக்கு ஒன்றும் தெரியாது. ராமாயணத்திலேயிருந்து ஏது வேணுமென்றாலும் கேளுங்கோ. டக் டக் கென்று பதில் சொல்லுகிறேன்."

யறியாமல் கோபத்துடன், "இனிமேல் இந்த மேதாவிக்குக் கடிதம் யார் எழுதப் போகிறார்கள்? கடிதம் எழுத வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறாராம்!" என்று கத்திவிட்டேன். அம்மா, சமையலறையிலிருந்தபடியே ஏதோ இரைந்தாள். அப்பா, "மோசமே போச்சு! இந்தக் காலிவிடம் அனுப்பிவிட்டு யார் சந்தியில் நிற்கிறது? அவன் பாட்டுக்கு இருந்து விட்டுப் போகிறான்!" என்று இரைந்தார். அதற்குப் பிறகு நாங்கள் ஒன்றும் எழுதவில்லை. இவையெல்லாம் நடந்து ஏகப்பட்ட வருஷங்கள் ஆகிவிட்டன. என் சகோதரிக்கு கலியாணமாய் அவள் தன் புக்ககம் சென்று விட்டாள். இன்னும் எங்கள் குடும்பத்தில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

என்னால் ஆரம்பிக்கப்பட்ட சங்கீத வித்யாசாலையும் நல்ல அபிவிருத்தியை அடைந்திருக்கிறது. பணத்தை விரும்பி நான் வித்யாசாலையை ஆரம்பிக்கவில்லை. ஏழைச் சிறுமிகளுக்குச் சங்கீதம் கற்பிக்க எண்ணியே நான் இதில் நுழைந்தேன். வருஷாந்திரக் கொண்டாட்டம், அது இது என்றெல்லாம் அமர்க்களமாய் நடக்கும். என் புகழ் ஓரளவு பரவியது.

பழைய கதைகளையெல்லாம் ஓரளவு மறக்க முயன்றேன். ஆனால், ஏனோ தெரியவில்லை. இன்று மீண்டும் என் உள்ளத்தில் பழைய எண்ணங்கள் தோன்றி வதைத்தன! நேரம் போனதே தெரியாமல் நான் தன்னந் தனியாய் இருட்டிய அறையில் உட்கார்ந்திருந்தேன். யாரோ இரைக்க, இரைக்க மெத்தைக்கு ஓடிவருவதைக் கேட்டு 'ஸ்விட்'சைப் போட்டேன். யாருமில்லை; என் தங்கைதான். "இந்தா, அக்கா! யாரோ ஒரு மாமா இந்தக் கவரைக் கொடுத்து 'உங்க அக்கா கிட்ட கொடு' என்றார்!" என்று சொல்லிவிட்டு என் கையில் ஒரு கவரைக் கொடுத்தாள்.

நான் சந்தேகப்பட்டுக் கொண்டே கடிதத்தைப் பிரித்தேன்.

நான் எண்ணியது சரிதான்; அவருடைய லிகிதந்தான். எத்தனை வருடங்கள் கழித்து, என்னை நினைத்துக்கொண்டு இந்த இரண்டாவது கடிதம் எழுதியிருக்கிறார் என்று எண்ணிக்கொண்டே எனக்குள் அழுத்த வாய்ச் சிரித்துக் கொண்டேன். இத்தனை நாள் அவர் தன் கற்பனை மனைவியுடன் காலங்கழித்தார் போலும்! கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். அதில் பின்வருமாறு கண்டிருந்தது:

"எவ்வளவோ வருஷங்கள் சென்ற பிறகு என்னிடமிருந்து வரும் இக்கடிதத்தைக் கண்டு நீ ஆச்சரியப் படலாம். வாலிபத்தின் முடுக்கில் ஒரு பெண்ணின் அன்பை நிராகரித்து அவள் மனதைப் புண்படுத்திய பாவத்தினால் நான் அநேக துன்பங்களுக்கு ஆளாகி விட்டேன். அவைகளை யெல்லாம் விவரித்து எழுதப் பிடிக்கவில்லை. உன்னால் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் சங்கீத வித்யாசாலையைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதற்கு என்னாலான உதவியைச் செய்ய இத்துடன் ஓர் 'செக்' வைத்திருக்கிறேன். இதை அங்கீகரிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்கிறேன். வாழ்க்கையில் வெறுப்புற்ற நான் இங்கிருக்கும் ஆசிரமமொன்றில் சேர்ந்திருக்கிறேன். இத்துடன் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
நித்தியானந்தன்."

இவ்வளவுதான் அதில் எழுதியிருந்தது. அதிலிருந்த 'செக்'கை எடுத்து ஜாக்கிரதையாய் வைத்துக் கொண்டேன்.

அந்த இரண்டாவது கடிதத்தை மறுமுறையும் படித்தேன்.

என்னையுமறியாமல் என் மனம் என்ன காரணத்தினாலோ ஒருவித வேதனையை அடைந்தது. "ஐயோ, பாவம்!" என்று என்னை யறியாமல் வாய்விட்டு அனுதாபத்துடன் சொல்லிவிட்டேன்.

என் குரலைக் கேட்டுக்கொண்டே அம்மா வந்தாள். "யாரோ கவர் கொண்டுவந்து கொடுத்தார்களாமே என்ன கவர், எங்கே யிருந்து வந்தது?" என்று கேட்டாள். நான் பதில் சொல்லாமல் கடிதத்தை நீட்டினேன். அம்மாவிற்கு விவரம் புரிந்து விட்டது.

அம்மா என்னைப் பார்த்தாள்; நான் அம்மாவைப் பார்த்தேன். எங்கள் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. கண்கள் மூலமாகவே ஒருவர் மனத்தை ஒருவர் அறிய முயன்றோம். ஆனால், அவரைப் பற்றி நானும் பேசவில்லை; அம்மாவும் ஒன்றும் பேசவில்லை. "எத்தனை?" என்று அம்மா சுருக்கமாய்க் கேட்டாள். "பத்தாயிரம் என்று எழுதியிருக்கிறது!" என்றேன் நான்.

இப்பொழுது நான் நித்யானந்தா ஸங்கீத வித்யாசாலைக்குத் தலைவியாயிருக்கின்றேன். அவரால் அனுப்பப்பட்ட பணத்தைக் கொண்டு கட்டிய கட்டிடத்திற்கு அவர் நாமத்தையே வைக்கவேண்டுமென்று என் பெண்ணுள்ளம் தூண்டியது. ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணை கட்டுவதற்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்து திருப்தி யடைந்த அணிலைப்போல் இப்பொழுதுதான் என் மனம் ஓரளவு சாந்தியை யடைந்திருக்கிறது.

ஒரு மோட்டார் சொந்தக்காரர் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கறுப்பு மார்க்கெட்டில் பத்து டின் பெட்ரோல் வாங்கினார். தமது வேலைக்காரனை ரகசியமாகக் கூப்பிட்டு, "இந்தப் பெட்ரோல் நம்மிடம் இருப்பது யாருக்குமே தெரியக்கூடாது. தோட்டத்தில் ஒரு குழி தோண்டி அதில் இதைப் புதைத்து விட்டு வா. வேண்டும்போது கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொள்ளலாம்" என்று சொன்னார். வேலைக்காரன் டின்களை எடுத்துக் கொண்டு போன சிறிது நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்து, "எஜமான்! நீங்கள் சொன்னபடியே குழி வெட்டிப் பெட்ரோலைப் புதைத்து விட்டேன். ஆனால் டின்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்று சந்தேகம் கேட்டானாம்.



பாபுவின் விஜயம்

மலர்



"அடேய்! மாரிமுத்து! மாரிமுத்து!" என்று கூப்பிட்டார் கணேசய்யர். தோட்டத்தில் ஏதோ முணுமுணுத்த வண்ணம் வேலை செய்து கொண்டிருந்த தோட்டக்காரன் மாரிமுத்து எழுந்து வந்தான்.

"ஓடு! குழந்தை பாபு ஊரிலிருந்து வருகிறது! வண்டியைக் கட்டிக்கொண்டு ரயிலடிக்குப் போய் அவனை அழைத்துக் கொண்டு வா!" என்றார் கணேசய்யர்.

ஒவ்வொரு வருஷமும் கோடை விடுமுறை வந்ததும் பாபு கிராமத்திலுள்ள தன் மாமா வீட்டுக்கு வந்து தங்குவான். பாபுவின் புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் கண்டு மாமாவும் மாமியும் ஆனந்தப் படுவார்கள். ஆனால், அவனைக் கண்டால் தோட்டக்கார மாரிமுத்துக்குக் கொஞ்சமும் பிடிக்காது.

ஏனெனில், கிழவன் முப்பது வருஷமாக அந்தப் பங்களாத் தோட்டத்தைப் பாதுகாத்து வருகிறான். அந்தத் தோட்டத்தை யாராவது கவனித்துப் பார்த்தால் கூட திருஷ்டி விழுந்து விடும் என்பான். ஒரு இலை, செடி—காற்றில் முறிந்து விட்டால்கூட அவனுக்கு அழுகை வந்து விடும்.

ஆனால், பாபு சும்மா இருப்பானா? துரு துருவென்று செடி கொடிகளின் அருகில் போய் இலைகளைக் கிள்ளுவான். பூக்களைப் பறிப்பான். இவையெல்லாம் மாரிமுத்துக்குப் பிடிக்குமா? இதனால்தான் பாபு லீவுக்கு வரப்போகிறான் என்றதும் அவனுக்குத் திகிலாயிருந்தது.

ரயிலிலிருந்து பாபு இறங்கி வந்தான். அவன் வண்டியில் ஏறிக்கொண்டதும் மாரிமுத்து பேசவில்லை. பாபுவை முறைத்துப் பார்த்தான். பாபுவும் அவனைப் பழிப்பது போல் முகத்தை வைத்துக் கொண்டான்.

அன்று சாயங்காலம் பாபு கால் பந்து விளையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது மாரிமுத்து பூச் செடியைக் கொத்திவிட்டு, உரம் போட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது கால் பந்து ஒன்று காற்றில் பறந்து வந்து, தொப்பென்று செடியின்மேல் விழுந்தது.

அப்படியே ஒரு கிளை ஒடிந்து கீழே விழுந்தது. கிழவனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. எடுப்பதற்காக பாபு ஓடிவந்தான். அங்கேயிருந்த கிழவனைப் பார்த்து விட்டு, "இந்தப் பக்கம் ஒரு பந்து வந்ததே பார்த்தாயா?" என்றான் பாபு.

"இல்லை, எனக்குத் தெரியாது.



மூன்று பேர்கள் படிக்கட்டுகளில் இறங்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யார் அதிக உயரம், யார் ரொம்பக் குட்டை என்று படத்தைப் பார்த்தவுடனே சொல்ல வேண்டும். பிறகு, உங்கள் ஊகம் சரியா என்று அளந்து பார்த்துச் சரிபார்த்துக் கொள்ளவும்.

போ!'' என்று சள்ளென்று எறிந்து விழுந்தான் மாரிமுத்து.

பாபு அவனைப் பரிகாசம் செய்து விட்டு எடுத்தான் ஓட்டம்.

மாரிமுத்து மண் வெட்டி, களைக் கொத்து, முதலிய சாமான்களைத் தோட்டத்தின் ஒரு மூலையிலுள்ள சிறிய தகரக்கொட்டகையில் வைப்பது வழக்கம். மறுநாள் காலை மாரிமுத்து வேலை செய்யச் சாமான்களை எடுக்கப் போனான். கொட்டகைக் கதவு திறந்து கிடந்தது. உள்ளே எட்டிப் பார்த்தான். பாபு கால் பந்தும் கையுமாக வெளியே வந்தான்.

"உன்னை யார் உள்ளே வரச் சொன்னு?" என்றான் கிழவன்.

"உன்னை யார் இந்தப் பந்தை ஒளித்து வைக்கச் சொன்னு?"

"நீ ஏன் நேற்றுச் செடியை ஒடித்தாய்?"

"நானு ஒடித்தேன்? பந்து அதன் மேல் தவறிப் பட்டு விட்டது!"


"உன்னை யார் பந்தாடச் சொன்னது?"

"செடி செடி என்று உயிரை விடுகிறாயே! அந்த ஆசையில கொஞ்சமாவது எனப்பரில் உனக்கு இல்லை. இருந்திருந்தால் பந்து ஏதோ தவறிப் பட்டு விட்டதற்காக என்னைக் கோபித்துக் கொள்ள மாட்டாய். நிஜத்தில், உனக்குச் செடியின் மேல் கூட ஆசை கிடையாது. என்மேல் உள்ள வெறுப்பைக் காண்பித்துக் கொள்ளத்தான் செடியின்மேல் ஆசை இருப்பதாகப் பாசாங்கு செய்கிறாய்."

"சரி, கிழவன் மாதிரி பேசாதே!"

"சரி, சரி, குழந்தை மாதிரி உளறாதே!"

பாபு பந்தை எடுத்துக் கொண்டு ஓட்டமாக ஓடிவிட்டான். கிழவனுக்கு என்னமோ போலிருந்தது. பாபு சொன்னது எனனமோ வாஸ்தவம் தான் என்று தோன்றியது. அவன் சொன்னதுபோல் குழந்தையிடம் கிழவனுக்கு ஆசையே இல்லையா? மாரிமுத்து யோசித்துப் பார்த்தான். இது வரையில் எந்தக் குழந்தையுடனும் அன்போடு பேசியதாக அவனுக்கு ஞாபகம் ஏற்படவே இல்லை.



மாரிமுத்துக்கு அவமானமாயிருந்தது. பாபுவைக் கூப்பிட்டுச் சமாதானம் செய்யலாமென்று பார்த்தான். ஆனால் பாபு தோட்டப் பக்கம் விளையாட வருவதேயில்லை. வந்தாலும் அவனுடன் பேசுவதில்லை. மாரிமுத்துக்குத் தோட்ட வேலையில் கூட கவனம் செல்லவில்லை. தோட்டமே பாழாயிருப்பதுபோல் மாரிமுத்துக்குத் தோன்றியது.

ஒரு வாரம் ஆயிற்று. பாபு ஊருக்குப் புறப்பட்டான். மாரிமுத்து ரயிலடிக்கு வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். "என்னோடு பேச மாட்டாயே!" என்றான் அவன் பையனைப் பார்த்து. பாபு முகத்தைத் திருப்பிக் கொண்டான். ரயில் வந்து விட்டது. பாபு ஏறிக் கொள்ளப் போகும் போது, கிழவன் முகத்தைப் பார்த்தான். மாரிமுத்துவின் கண்களில் ஜலம் ததும்பிற்று. பாபுவுக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. ஓட்டமாக ஓடி வந்து கிழவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான். "இனிமேல் என்னைக் கோபித்துக் கொள்ள மாட்டாயே!" என்றான். "மாட்டேன். எந்தக் குழந்தையையும் இனிமேல் கோபித்துக் கொள்ள மாட்டேன்" என்றான் கிழவன்.

இதற்குப் பிறகு, குழந்தைகள் தோட்டத்தில் விளையாடும்போதும், சிரிக்கும்போதும் கிழவன் ஆனந்தம் அடைவான். காலையில் குழந்தைகள் பூப்பறித்துக் கொண்டு போவார்கள். அப்பொழுது தோட்டக்காரனின் மனம் ரொம்பவும் குதூகலம் அடையும். குழந்தைகளிடம் அன்பாயிருந்தால், இவ்வளவு சந்தோஷம் ஏற்படுமா என்று அவன் அதிசயித்தான்.



பிரபல ஆசிரியரான விக்டர் ஹியூகோ எழுதிய முதல் புத்தகம் விற்பனைக்கு வெளியாயிற்று. ஹியூகோவினால் அன்று சாயந்திரம் வரை பொறுத்திருக்க முடியவில்லை. இதற்குள் எத்தனை புஸ்தகங்கள் விற்பனையாகியிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள ஒரே ஆவலாயிருந்தார். எனவே, பிரசுரகர்த்தரை "விற்பனை எப்படியிருக்கிறது?" என்று கேட்பதற்குப் பதிலாக சங்கேதமாய் ஒரு கார்டில் வெறும் கேள்விக்குறி ஒன்றை பெரிதாக (?)ப் போட்டு அனுப்பினார். பிரசுரகர்த்தர் அதைப் புரிந்துகொண்டு "இதுவரை ஒரு புத்தகம்கூட விற்கவில்லை!" என்பதற்குச் சங்கேதமாக அவரும் மற்றொரு கார்டில் பெரிதாக ஒரு ஆச்சரியக்குறி(!)யைப் போட்டு அனுப்பினார்!

○★○

ரஷ்யப் போர் முனையில் தீவிரமாக சண்டை செய்துவிட்டு வந்த ஒரு ஜெர்மன் ஸோல்ஜருக்கு உடம்பில் லேசாகக் காயம் பட்டிருந்தது. எனவே அவன் சிகிச்சைக்காக ஒரு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான். அங்கே எதிர் எதிராக இருந்த இரண்டு கதவுகளில் ஒன்றில் "உத்தியோகஸ்தர்கள்" என்றும், மற்றொன்றில் "ஸோல்ஜர்கள்" என்றும் எழுதியிருந்தது. அந்த ஸோல்ஜர் "ஸோல்ஜர்கள்" என்று எழுதியிருந்த அறைக்குள் நுழைந்தான். அங்கே நுழைந்ததும் இன்னும் இரண்டு கதவுகள் காணப்பட்டன. ஒன்றில் "சாதாரண காயம்" என்றும் மற்றொன்றில் "பலத்த காயம்" என்றும் எழுதியிருந்தது. ஸோல்ஜர் "சாதாரண காயம்" என்று போட்டிருந்த அறைக்குள் நுழைந்தான். அங்கே வேறு இரண்டு கதவுகள் இருந்தன. ஒன்றில் "மெம்பர்கள்" என்றும் மற்றொன்றில் "மெம்பரல்லாதவர்கள்" என்றும் இருந்தன. அவன் மெம்பரல்லாதவர்கள் அறையில் நுழைந்து சென்றான். இதில் வேடிக்கை என்னவென்றால் ஸோல்ஜர் எந்த இடத்திலிருந்து ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தானோ அந்த இடத்துக்கே வந்து சேர்ந்தான்!

வீட்டுக்குச் சென்றதும் அவன் மனைவி "காயத்துக்கு ஆஸ்பத்திரியில் மருந்து போட்டார்களா?" என்று கேட்டாள். அதற்கு அவன் "மருந்து போடவில்லை. ஆனால் ஏற்பாடுகளெல்லாம் ரொம்ப ஒழுங்காகச் செய்து வைத்திருக்கிறார்கள்!" என்றான்.

○✶○

இந்த யுத்தத்தில் ரஷ்யாவிலிருந்து ஜெர்மானியர்கள் பின்வாங்கி ஓடிக்கொண்டிருப்பதைக் கேலி செய்வதற்காக ரஷ்ய ஸ்டேஷன் ஒன்றில் பின்வருமாறு ஒரு போர்டு எழுதி மாட்டியிருந்ததாம்:—

ரஷ்யாவில் இப்போது தவறாமல் ஓடிக்கொண்டிருப்பவை ரயில்களும் மோட்டார் பஸ்களும், ஜெர்மானியரும்!

○✶○

ஹோமர்கிராய் என்ற ஒரு வெள்ளைக்காரப் பிரமுகர் சிறுவனாயிருந்த சமயம் அவரிடம் சிறு ஆங்கில அகராதி ஒன்று இருந்ததாம். அவர் அந்த அகராதியில் உள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் தெரிந்துகொண்டுவிட வேண்டுமென எண்ணினார். உடனே அகராதியைப் புரட்டினார். "காக்ஸ்கோம்ப்" (Coxcomb) என்ற பதத்திற்கு அர்த்தம் விளங்கவில்லை. என்னவென்று பார்த்தார். "காக்ஸ் கோம்ப்" என்றால் "பாப்"—Fop என்று அர்த்தம் போட்டிருந்தது. Fop என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரியவில்லை. மறுபடியும் அகராதியைப் புரட்டினார். பாப் என்றால் "காக்ஸ் கோம்ப்" (Fop – cox Comb) என்று போட்டிருந்தது. அவ்வளவுதான்! அன்றோடு அவர் ஆங்கிலம் படிப்பதை விட்டுத் தொலைத்தார்!

காலக்ஷேபம்

அவர் வாங்கி வந்தது!

பங்கஜம்:—முன்பெல்லாம் உன் புருஷர் மாலையில் ஆபீஸிலிருந்து வரும்போது உனக்குப் பூ வாங்கிவருவாரே, இப்போது அப்படி இல்லையா?

கல்யாணி:—ஏன் இல்லை? நேற்றுக்கூட மூன்று வாழைப்பூ வாங்கி வந்தாரே!

—எம். வி. ராஜாமணி.

★

வந்த பழக்கம்!

தகப்பனார்:—ஏண்டா, பிரைவேட் உபாத்தியாயர் பதிலைச் சொல்லிக் கொடுத்துக் கேள்வியைக் கேட்டபோது புஸ்தகத்தைப் பார்த்தாயாமே! இந்தப் பழக்கந்தானே பள்ளிக்கூடத்திலும் வரும்?

பையன்:— இந்தப் பழக்கம் பள்ளிக்கூடத்திலிருந்துதானே வந்தது?

—என். ராஜலக்ஷ்மி.

★

எங்கே தேடுவது?

மானேஜர்:— பதினைந்து நாட்களுக்கு முன்புதானே இந்த ஆபீஸிலிருந்து உன்னை வேலையை விட்டு நீக்கினேன்! மறுபடியும் இங்கேயே வந்து வேலை தேடுகிறாயே?... பேஷ்!...

மனுதார்:—ஆம்! என் வேலை தொலைந்தது இங்கேதான்!...தொலைந்த இடத்தில் தானே நான் தேடவேண்டும்!

—என். நாராயணன்.

★

எப்படியும் குற்றமா?

சிறையில் முதல் கைதி (புதியதாய் வந்த கைதியைப் பார்த்து):—ஏன் தம்பி, நீ என்ன குற்றம் செய்தாய்?

புதிதாய் வந்த கைதி:—நான் ஒரு டெனண்டன் பேனாவைப் பத்து ரூபாய்க்கு விற்று விட்டேன். அது குற்றமாம்! கண்ட்ரோல் விலை மூன்று ரூபாய்க்குமேல் விற்கக் கூடாதென்று சட்டமாம்.

முதல் கைதி:—எனக்கும் டெனண்டன் பேனா விலை தெரியவில்லை. நான் அதைப் பத்து அணாவுக்கு விற்க முயன்று கொண்டிருக்கும் போதுதான் போலீஸ்காரன் பிடித்துக் கொண்டு விட்டான்!

—எஸ். ஆர். மணி.

★

நல்ல வித்தியாசம்?

ஹோட்டலுக்குச் சென்ற ஒருவர் பரிசாரகனைப் பார்த்து "என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

பரிசாரகன்:—மைசூர் பாக், ஜாங்கிரி, தோசை, ஸ்பெஷல் தோசை, வடை......

வந்தவர்:—சரி; தோசைக்கும், ஸ்பெஷல் தோசைக்கும் என்ன வித்தியாசம்?

பரிசாரகன்:—முக்காலணா வித்தியாசம்!

—சுப்பிரமணியன்.

★

என்ன ஆகும்?

உத்தரவின்றி ஆபீசுக்குள் நுழைய முயற்சித்த ஒரு பேர்வழியை வழிமறித்த ஆபீஸ் காவலாளி, "ஸார்! உத்தரவில்லாமல் உள்ளே போகக்கூடாது. நில்லுங்கள், இல்லாவிட்டால்......"

பேர்வழி:—இல்லாவிட்டால் என்ன?

காவலாளி:—என் வேலை போய்விடும்!

—கே. ராமசுவாமி.

★


நல்ல பிரதிநிதி!

மானேஜர்:—என்ன ஸார்! இந்தக் காரியத்தில் நீர் துளிக்கூடப் புத்தி இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறீர்?



உதவி மானேஜர்:—நான் என்ன ஸார் பண்ணுவது? தங்களின் பிரதிநிதி என்ற ஹோதாவில் அவ்விதம் நடக்கவேண்டியிருக்கிறது!

—டி. எஸ். சுப்புஸ்வாமி.



98. இரவி தோன்றினாய்!

அதிகாரவர்க்கம் என்றால், அது அதிகாரத்துக்கு உட்பட்டவர்களை எப்படியும் பாதித்தேவிடும். இது தற்காலத்திய உண்மை. பூர்வகாலத்திய உண்மையுந்தான்.

ஆம்; ராஜா எப்படியோ அப்படியே பிரஜைகள்.

நடை உடை பாவனை எல்லாம் மாறிவிடும். மாறியதுகூடத் தெரியாது அந்தப் பிரஜைகளுக்கு.

• • •

தண்டகவனத்து ரிஷிகள் தங்கள் ஒழுக்கத்தைப் பற்றி ராமனிடம் சொல்லுகிறார்கள். என்ன சொல்லுகிறார்கள்:

எங்களை ஆளும் அதிகாரவர்க்கத்தினர் இரக்கம் என்பது லவலேசமும் இல்லாத பிரகிருதிகள்.

இரக்கம் என்(று) ஒரு பொருள்
இலாத நெஞ்சினர்
அரக்கர்என்(று) உளர் பலர்;
அறத்தின் நீங்கினர்
நெருக்கவும், யாம்படர்
நெறிய லாநெறி
துரக்கவும், — அருந்தவத்
துறையின் நீங்கினேம்.

[அறத்தின் நீங்கினர் நெருக்கவும்: தர்ம நெறியை விட்டொழிந்த பாவிகள் எங்களைப் பலவாறும் ஹிம்சித்தும்; யாம்படர் நெறி அலா நெறி துரக்கவும்: நாங்கள் அனுஷ்டித்து வந்த ஒழுக்கத்துக்கு மாறான ஒழுக்கங்களைப் புகுத்தியும் வருகிறார்கள்; அது காரணமாக: அருந்தவத் துறையின் நீங்கினேம்: எங்களுக்கு உரிய தவத்துக்கான ஒழுக்கத்தினின்றும் நீங்கி விட்டோம்.]

தியானம் அனுஷ்டானம் எல்லாவற்றையும் விட்டு விட்டோம். பிறகு கற்பவருக்கு உதவி செய்கிறது என்று ஒன்று இருக்கவா செய்யும்?

மாதவத்(து) ஒழுகலெம்,
மறைகள் யாவையும்
ஓதலெம், ஓதுவார்க்(கு)
உதவல் ஆற்றலெம்,
மூதெரி வளர்க்கிலெம்,
முறையின் நீங்கினேம்
ஆதலின் அந்தண
ரேயும் ஆகிலெம்!

[மூதெரி வளர்க்கிலெம்: நெருப்புக்குச்சி இல்லாத காலத்தில் வாடா அக்னியை வளர்ப்பது பரோபகாரமாய் இருந்தது. முனிவர்கள் அந்த அக்னியை வளர்த்து வந்தார்கள் — தண்டக வனத்து ரிஷிகள் அந்தக் காரியத்தையும் கைவிட்டு விட்டோம் என்று சொல்லுகிறார்கள். அந்தணரேயும் ஆகிலெம்: ரிஷிகள் என்றே எங்களைச் சொல்லக் கூடாது.]

வைதிகத் துறையில் ஈடுபட்ட எங்கள் காரியந்தான் இப்படி இருக்கிறது. போகட்டும். வீராதி வீரர்களாய், தேவேந்திரனே என்று சொல்லக்கூடிய அரசர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள்: அவர்களுடைய காரியம் எப்படி என்று கேட்டாலோ?

இந்திரன் எனில்அவன்
அரக்கர் ஏயின,
சிந்தையிற் சென்னியில்
கொள்ளும் செய்கையான்;
எந்தை! மற்(று) யாருளர்
இடுக்கண் நீக்குவார்?
வந்தனை யாம்செய்த
தவத்தின் மாட்சியால்

[இந்திரன்: இந்திரன் என்று சொல்லக் கூடிய சக்தி வாய்ந்த அரசர்கள்; அரக்கர் ஏயின: அரக்கர்கள் கட்டளை இட்ட விஷயங்களை—தங்களுக்கும் இனத்தாருக்கும் கேடாக இருந்தாலும், சிந்தையிற் சென்னியிற் கொள்ளும் செய்கையான்: அந்த இந்திரப் பிரகிருதிகள் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளுவார்கள்; சந்தோஷத்தோடு செய்யவும் செய்வார்கள்—கொஞ்சம் பின் வாங்கினால் தொலைய வேண்டியதுதானே அவர்கள்; இன்றைக்கும் சிற்றரசர்கள் பாடு அப்படித்தான்; எந்தை: எங்கள் அப்பனே; இடுக்கண் நீக்குவார்: எங்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்யக் கூடியவர்கள்.]

கடைசியாக முனிவர்கள் மிக்க உணர்ச்சியோடு முறையிடுகிறார்கள்:

உருளுடை நேமியால்
உலகை ஓம்பிய
பொருளுடை மன்னவன்
புதல்வ! போக்கிலா
இருளிடை வைகினோம்;
இரவி தோன்றினாய்!
அருளுடை வீர,நின்
அபயம் யாமென்றார்.

[உருளுடை நேமியால்: கண்ணுக்குப் புலப்படவில்லை யானாலும் ஆக்ஞா சக்கரம் ராஜ்யம் எங்கும் சுற்றிக் கொண்டிருப்பதால்; உலகை ஓம்பிய பொருளுடை மன்னவன் புதல்வ: ராஜ்யத்தைச் செவ்வையாய்ப் பாதுகாத்து அது காரணமாக அழியாச் செல்வம் படைத்த சக்கரவர்த்தி தசரதனது புதல்வனே; இரவி தோன்றினாய்: இருளிலுள்ள எங்களுக்குச் சூரியனாகத் தோன்றினாய்.]

உயரிய வாழ்க்கை, பண்பாடு இவைகளில் திளைத்திருக்க வேண்டிய சமுதாயம் அவைகளை விட்டு விலகிக் கிடந்தால், இருளில் கிடக்கிற கணக்குத்தான். அந்த விதமாகவே ரிஷிகளும் தங்களைப் பற்றி சொல்லிக் கொள்கிறார்கள்.

வட்டமேஜை

அகில பாரத சர்க்கா சங்கம்,
தமிழ்நாடு, திருப்பூர்
8—4—1945.

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

கதர் வாங்குபவர்கள் நூற்க வேண்டும் என்ற புதிய திட்டத்தைப் பற்றி இந்த வாரக் கல்கியின் தலையங்கத்தில் எழுதியதற்கு வந்தனம். அதில் ஒரு சிறு திருத்தம் அவசியம். அதாவது 5 ரூபாய்க்குக் கதர் வாங்குபவர்கள் ஒரு சிட்டம் நூலும் அதன் கிரயமான ரூ 0-2-6 போக பாக்கி ரொக்கம் ரூ. 4—13—6 கொடுத்தால் போதுமானது.

நாளடைவில் ரூபாய்க்கு அரையறு நூல் என்பது ஒரு சிட்டமாக அதிகரிக்கப்படும்.

புதிய கதர்த் திட்டத்தைப் பற்றி விளக்கி, ஒரு தனிப் பிரசுரம் தமிழ்நாடு சர்க்கா சங்க மூலம் வெளிவிடப்படும்.

தங்கள்,
ராமஸ்வாமி
காரியதரிசி.

[ஜூலை மாதத்திலிருந்து கைராட்டை நூல் கொடுத்தால்தான் கதர் வாங்க முடியும் என்பதை நேயர்களுக்கு மீண்டும் ஞாபகப் படுத்துகிறோம். —ஆசிரியர்]

தமிழ்ப் பெருங்கவி முதுபெரும் புலவர் ராவ்சாகிப் பி. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் பின்வரும் கடிதத்தை மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம் :—

வெள்ளக்கால்,
8—4—1945.

1—4—45-ல் வெளியான தங்கள் 'கல்கி' பத்திரிகையின் தலையங்கத்தை வாசித்துப் பார்த்தேன். 'வீரர்களுக்கு வரவேற்பு' என்ற தங்கள் கட்டுரையைத்தான் சொல்கிறேன். நம் நாட்டிலிருந்து சென்றிருக்கும் போர் வீரர்களைப் போற்றி எழுதியதை நான் இதுவரை படித்ததில்லை. 'சோற்றுப் பட்டாளம்' என்று தூற்றுவதைக்கூட நிறுத்தவில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் இந்த வீரர்களின் சேவையைப் பாராட்டித் தாங்கள் எழுதிய கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. இந்த வீரர்களைப் பற்றி நான் என்ன என்ன நினைத்தேனோ அவைகளை யெல்லாம் அப்படியே எழுதி யிருக்கிறீர்கள். மேலும் அவர்களைத் தக்க முறையில் பாராட்டிப் பேசி யிருக்கிறீர்கள். உண்மையாகப் பாராட்டப்பட வேண்டியவர்களைப் பாராட்டி எழுதி யிருக்கிறீர்கள். தேச விடுதலைக்குப் பாடு படுகிறோம் என்று சொல்லிக் கொண்டே நம் தேசத்துப் போர் வீரர்களைக் குறை கூறுவதை நான் வெறுக்கிறேன். தங்களுடைய பாராட்டுதல்—உண்மையாகவே—அந்த வீரர்களுக்கு மிகுந்த உற்சாகமளிக்கும் என்று நம்புகிறேன். தங்கள் கட்டுரையைப் படித்து நான் அடைந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்கவே நான் இந்தக் கடிதம் எழுதினேன். தங்களுக்கும் தங்கள் பத்திரிகைக்கும் என் ஆசி.

தங்கள் அன்புள்ள,
வெ. ப. சுப்பிரமணியன்.

[போர்முனையிலுள்ள வீரர்கள் நமது கட்டுரையைப் படித்து உற்சாகமடைந்தாலும் அடையா விட்டாலும், இந்தத் தொண்ணூறு வயது வீரருக்கு மேற்படி கடிதத்தை எழுதுவதற்குரிய உற்சாகத்தை அக்கட்டுரை அளித்ததே நமக்குப் பெரிதும் திருப்திகரமா யிருக்கிறது. நமது முதுபெரும் புலவருடன் மாறுபடும் அபிப்பிராயமும் உண்டு என்பதைப் பின்வரும் கடிதத்திலிருந்து அறியலாம். —ஆசிரியர்]

சென்னை,
9—4—1945.

"கல்கி" ஏப்ரல் 1-ந்தேதி இதழில் தாங்கள் எழுதிய 'வீரருக்கு வரவேற்பு' என்னும் தலையங்கத்தைப் படித்தேன்.

1. இந்தியச் சைன்யத்தில் சேர்ந்திருக்கும் சுமார் இருபது லட்சத்திற்கு மேற்பட்ட நமது சகோதரர்களை 'வயிற்றுச் சோற்றுக்காகப் பட்டாளத்தில் சேர்ந்தவர்கள்' என்று சொல்வது அநீதி என்று கருதுகிறீர்கள். நமது இந்திய வீரர்கள், மற்ற தேசதேசத்தினரைப் போல, உலகத்தில் சுதந்திரத்தையும், சமாதானத்தையும், சம உரிமையையும் நிலைநாட்ட சைன்யத்தில் சேர்ந்து போர் செய்கின்றனர் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் சுதந்திரம் இன்னதென்பதை அறியாத அடிமை இந்தியர்கள், மற்ற நாடுகளின் சுதந்திரத்தைக் காப்பாற்றப் போரிடுகிறார்கள் என்பதில் முரண்பாடு இல்லையா?

2. பட்டாளத்தில் சேர்ந்த வீரர்கள் திரும்பி வரும் பொழுது அவர்களை ஆதரவோடு வரவேற்பு அளிக்க வேண்டுமென்று கூறுகிறீர்கள். அதன்படி அவ் வீரர்கள் பிடித்துக் கொண்டு வரும் 'யூனியன் ஜாக்' கொடிக்கும், அவர்கள் பாடும் 'வாழ்க மன்னர் பிரான்' சங்கீர்த்தனத்திற்கும் ஆதரவளிக்க வேண்டுமா?

3. சுதந்திர ஆர்வம் கொண்ட அவ் வீரர்களை, நாம் அன்புடன் வரவேற்காவிடில் தேசத்திற்குப் பிரதிகூலம் ஏற்படும் என்று கருதுகிறீர்கள். ஆனால் சென்ற மகா யுத்தத்தின் காரணமாக, அயல் நாடுகளுக்குச் சென்று தாய் நாடு திரும்பிய வீரர்கள், தம் நாட்டின் சுதந்திரத்தில் எவ்வளவு தூரம் ஆர்வங்கொண்டனர் என்பது தெரியவில்லை. இந்த வீரர்கள் — துப்பாக்கியை உபயோகிக்கச் சாமர்த்தியமும், தீரமும் துணிகரமும் வாய்ந்த வீரர்கள் — நாட்டின் விடுதலை காரணமாக நடந்த சத்தியாக்கிரஹம் முதலிய இயக்கங்களை அடக்குவதற்கும், நாட்டின் அருந்தவப் புதல்வர்களைச் சுட்டுக் கொல்வதற்கும் உபயோகப்படுத்தப்பட்டனர் என்பதை மறந்துவிட்டீரா? மேலும் ராஜதந்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சண்டைக்குச் சென்று திரும்புவோருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் விசேஷச் சலுகைகளைக் காட்டி, அவர்களை அரசியலிலும் மற்ற எல்லாத் துறைகளிலும் ஒரு தனிக் கட்சியினராகச் செய்து, நாட்டின் விடுதலைப் பிரச்னைக்கு முட்டுக் கட்டை போடும் வன்மையுடையவராகச் செய்ய முடியும் என்று கூறப்படுகின்றது. இதுவும் தங்களுக்குத் தெரியாத விஷயம் அல்லவென்று நினைக்கின்றேன்.

'தேசியப் போர்முனை' என்று வழங்கப்படும் ஓர் ஸ்தாபனம் சமீப காலத்தில் கலைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த ஸ்தாபனம் செய்து வந்த யுத்தப் பிரசாரங்களுக்குப் பதிலாகத் தங்களுடைய கட்டுரையை உபயோகிக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மன்னிக்கவும்.

இப்படிக்கு
வ. ரா. சௌந்திரராஜன்.

[பதில் (1) :—சுதந்திரம் இன்னதென்று அறியாத அடிமை இந்தியர்களின் தேசிய காங்கிரஸ் மகாசபை ஸ்பெயினுக்கும், அபிஸீனியாவுக்கும், சைனுவுக்கும் அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றியதில் முரண்பாடு இல்லையா? அதில் முரண்பாடு இல்லாவிட்டால், இதிலும் இல்லை.

இந்தியச் சைன்யத்தில் சேர்ந்திருக்கும் இருபது லட்சத்திற்கு மேற்பட்ட நமது சகோதரர்கள் மற்ற நாடுகளின் சுதந்திரத்துக்காகப் போரிட்டார்கள் என்றால், அதனால் நமது சுதந்திரக் கோரிக்கைக்கு மிக்க வலிவு உண்டாகிறது. "மற்ற நாடுகளின் சுதந்திரத்துக்காகப் போரிட்டோமே? எங்கள் சுதந்திரம் எங்கே?" என்று கேட்க உரிமை ஏற்படுகிறதல்லவா? அதோடு மகாத்மா தமது கடைசி அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல் "இந்தியர்கள் வீரமுடையவர்கள்" என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கிறதல்லவா?

(2) இந்தத் தடவை பட்டாளத்திலிருந்து திரும்பிவரும் வீரர்கள் நமமை யெல்லாம் விடத் தீவிர தேசபக்தி கொண்டவர்களாயிருப்பார்கள் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். தேசியக் கொடி பிடித்துக் கொண்டு போய் "வந்தே மாதர" கோஷத்துடன் அவர்களை வரவேற்கலாம்.


(3) உங்கள் கடிதத்தில் ஒரு வாக்கியத்தைப் பெரிய எழுத்தில் அச்சிட்டிருக்கிறோம். அதுவேதான் உங்களுடைய மூன்றாவது ஆட்சேபத்திற்குப் பதில். நீங்கள் குறிப்பிடும் விபரீதம் நேராமல் இருப்பதற்காகவே நமது யோசனை. இந்திய வீரர்கள் நீங்கள் பயப்படுவதுபோல் நாட்டின் விடுதலைக்கு முட்டுக்கட்டை போடுவோர் ஆவதைத் தடுப்பதற்காகவே சொல்கிறோம்.

மற்றக் காரியங்கள் எப்படியானாலும் 'வயிற்றுச் சோற்றுப் பட்டாளம்' என்று சொல்வதை நாம் கண்டிப்பாய் ஆட்சேபிக்கிறோம். வயிற்றுச் சோற்றுக்காகச் சேவகவிருத்தியோ வேறு விருத்தியோ செய்வதைக் காட்டிலும் சைன்யத்தில் சேருவது எவ்விதத்தில் மட்டமாகும்? இந்த பிரிட்டிஷ் சர்க்கார் நடப்பதற்குக் கோடிக்கணக்கில் வரி கொடுக்கும் முதலாளிகளையும் வியாபாரிகளையும் மற்றும் பல தொழில்கள் செய்பவர்களையும் காட்டிலும் போர் வீரர்கள் எந்த விதத்தில் தேசத்துக்குத் துரோகம் செய்கிறார்கள்?

கடைசியில், உங்களுடைய 'தாழ்மையான' அபிப்பிராயத்துக்காக 'மன்னிப்பு'க் கேட்டிருப்பது அவசியமில்லை. தேசியப் போர்முனைக்காரர்கள் மகாத்மா காந்தியின் பேச்சையும், பண்டித ஜவாஹர்லாலின் பேச்சையுங் கூடத்தான் உபயோகப்படுத்திக் கொண்டார்கள். அம்மாதிரி நம்முடைய கட்டுரையையும் யாராவது உபயோகப்படுத்திக் கொண்டால், அதை நாம் தடுக்க முடியாது. —ஆசிரியர்.]

கனடாவுக்குப் போகிறர்

★



இதோ இந்தப் படத்தில் காணப்படும் எம். ஏ. தங்கராஜ் எம். ஏ. கனடாவுக்குப் போகிறர். வின்ஸெண்ட் மேஸி உபகாரச் சம்பளம் பெற்று, பௌதிக சாஸ்திர ஆராய்ச்சி செய்வதற்காகக் கனடா டொராண்டோ சர்வ கலாசாலைக்குப் போகிறர். வருஷா வருஷம் ஒரு இந்தியருக்கு அளிக்கப்படும் இந்த உபகாரச் சம்பளம் இவ் வருஷம் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் பௌதிக சாஸ்திர போதகராக இருக்கும் இவருக்குக் கிடைத்திருக்கிறது.



கோதைத் தீவு

[ஆசிரியர் : வ. ரா ; பிரசுரம் : புத்தக நிலையம், தெப்பக்குளம், திருச்சி ; விலை : ரூ. 2.]

பழைய சம்பிரதாயங்களையும், பத்தாம் பசலிப் பழக்க வழக்கங்களையும், அர்த்தமில்லாத ஆசார அநுஷ்டானங்களையும், கஷ்ட-நிஷ்டூரத்தைக் கவனியாது, விருப்பு—வெறுப்பைப் பாராது, தம் அறிவுச் சம்மட்டியால் எப்பொழுதுமே வெளுத்துக் கட்டுபவர் ஸ்ரீ வ. ரா. அவர்கள். வாழ்க்கையில் பெண்கள் அடைய வேண்டிய உரிமைகளைப் பற்றி அவர் நெடுநாளாகக் கண்டு வந்த அற்புதக் கனவே இந்தக் 'கோதைத் தீவு.' புராண நிகழ்ச்சிகளையும், பூர்விகச் சம்பவங்களையும் தம் தர்க்கத் தராசைக்கொண்டு நிறுத்து, பழைய மோசடிகளை யெல்லாம் பகிரங்கப்படுத்தி, சுயநலப் பதர்களின் சூழ்ச்சியை வெட்ட வெளிச்சமாக்கி, எக்காலம் போடும் வலிமை மிகுந்த தம் எளிய நடையிலே ஆசிரியர் வ. ரா இந்நூலை எழுதியிருக்கிறார்.

தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டிய இந்தப் புத்தகத்தின் நோக்கத்தைப் பற்றி ஸ்ரீ வ. ரா. தம் முகவுரையில் அழுத்தந் திருத்தமாக அமைந்திருப்பதைக் கேளுங்கள்:

"......நம் நாட்டு ஆண்கள் அடிமைகளாக வாழ்கின்றார்களே. அவர்கள் 'கோதைத் தீவை'ப் படித்தாகிலும் யோசனை செய்யமாட்டார்களா என்ற ஆசையுடன் தான் இதை நான் எழுதினேன். நீல முட்டாள்கள் நினைக்கக்கூடியதைப் போல், ஆணுக்கும் பெண்ணுக்கும் சண்டை மூட்ட அல்ல."

இல்லை ஐயா, இல்லை! நாம் அப்படி நினைக்கவே இல்லை!

காவியமும் ஓவியமும்

[ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன் ; பிரசுரம் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை ; விலை : ரூ. 2-8]

காவியம் சொற் சித்திரம். காவியத்தின் சிறப்பை அதனைச் சித்திரித்துக் காட்டும் ஓவியம் நன்கு விளக்குவதாகும். காவியப் புலவன் அற்புதக் கவிகளில் அபூர்வக் கருத்துக்களைச் சொற்களின் மூலம் பொழிவது போல் ஓவியப் புலவன் சில கோடுகளைப் போட்டு உண்மை பாவத்தைக் கொண்டு வந்து விடுகிறான்.

காவியத்தையும் ஓவியத்தையும் இந்நூலாசிரியர் பிணைத்துக் காட்டியிருக்கிறார். கல் பொருசிறு நுரையார், மாறன் பொறையனார் முதலிய பழந்தமிழ்ப் புலவர்களின் பெயரைச் சொல்வதே சிரமமாயிருக்கும்போது அவர்கள் இயற்றிய நூல்கள் படிப்பதற்குச் சிரமமாயில்லாமலிருக்குமா? சங்க நூற் பாடல்களின் சங்கடங்களை யெல்லாம் தமது தெள்ளிய தமிழ் வியாக்கியானத்தின் மூலம் நீக்கி யிருக்கிறார் ஆசிரியர். அவற்றை மேலும் தெளிவாக்கி வெளிச்சம் போட்டுக் காண்பிக்கின்றன சாலும் அவர்களால் வரையப்பட்டுள்ள உயர்தரச் சித்திரக் காட்சிகள்.

காந்தி ஜின்னா பேச்சு (ஹிந்தி)


[பிரசுரம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ், புதுடில்லி: விலை : அணா 12.]

காந்தி-ஜின்னா பேச்சு முறிந்தாலும், அதன் எதிரொலி இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. காந்தி-ஜின்னா பேச்சு வார்த்தை ஏன் முறிந்தது என்பதை ஆர அமர யோசித்துப் பார்ப்பதற்கு இது மிக்க உதவியாயிருக்கும். எளிய ஹிந்தியில் அழகாக மொழி பெயர்த்திருக்கிறார்கள். காந்தி — ஜின்னா கடிதப் போக்கு வரத்தும் மற்றும் சம்பந்தப் பட்ட எல்லா விவரங்களும் இதில் அடங்கி யிருக்கின்றன.

யஜுர் வேதம்

[ஆசிரியர் : எம். ஆர். ஜம்புநாதன்; பிரசுரம் : ஜம்புநாதன் புத்தகசாலை, சென்னை ; விலை : ரூ. 3.]

வேதம் என்றால் நமக்குப் பயமும் பக்தியும் உண்டாகிறது. அது பெரிய விஷயம் என்றும் யாருக்கும் புரியாதென்றும் நினைக்கிறோம். இந்தப் புத்தகத்தைப்படிப்பதன்மூலம் அந்த அபிப்பிராயம் உறுதியாகிறது. புத்தகம் தமிழிலேயே இருக்கிறது. ஆனாலும், வேதம் அல்லவா? வேதத்தைப் புரிந்து கொள்ள எல்லோராலும் ஆகுமா? எனினும், நமது ஹிந்து சமயத்துக்கே அடிப்படையான வேதங்களைப் பற்றி ஏதோ புரிந்த வரையிலாவது தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதற்கு இந்நூலின் மூலம் ஸ்ரீ ஜம்புநாதன் நமக்கு அரும்பெரும் உதவி செய்திருக்கிறார். தமிழுலகம் இவ்வாசிரியருக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. தமிழ்ப் படித்தியதைப் புரிந்து கொள்வதே இவ்வளவு சிரமமாயிருக்கிறதே. மூலத்தின் பொருளை அறிந்து தமிழ்ப் படுத்துவதற்கு இந் நூலாசிரியர் எவ்வளவு சிரமப் பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணும்போது ஒரே பிரமிப்பாயிருக்கிறது.



சீநிதி :— நீ திருடிய பொருள்களை எல்லாம் எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?

குற்றவாளி :— அடுப்பிலே போட்டு எரித்து விட்டேனுங்க.

சீநிதி :— என்ன? நீ வியாபாரியின் வீட்டில் திருடிய இருபது பவுன் சங்கிலி, இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள வைர நகைகள் அவ்வளவையும் அடுப்பில் போட்டு எரித்து விட்டாயா?

குற்றவாளி:—அட, தெய்வமே! கடவுளறிய நான் இரண்டு கட்டு விறகு மட்டும்தானே திருடினேன்?
—நந்தன்.

வேண்டாம் ஐயா, வேண்டாம்!



நாடோடி

"வேண்டாம் ஐயா, வேண்டாம்! இன்னும் ஏழேழு ஜன்மத்துக்கு வேண்டாம்!"

"ஏன் ஸார் வேண்டாம் என்கிறீர்கள்? பரவாயில்லை, வாங்கிக் கொள்ளுங்கள்!"

"ஊஹூம், வேண்டாம் ஐயா, வேண்டாம். இன்னும் ஏழேழு ஜன்மத்துக்கு வேண்டாம்."

"அதெல்லாம் முடியாது. நீங்கள் வாங்கிக் கொண்டுதான் ஆகவேண்டும்" என்று அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் தம் கையில் வைத்திருந்த இலவச ஸினிமா டிக்கட்டை என் கையில் வைக்கப் பார்த்தார்.

எங்கே இலவச டிக்கட்டைத் தலையில் கட்டிவிடப் போகிறாரோ என்று பயந்து கொண்டு அங்கிருந்து ஓட்டம் எடுத்தேன். தெனாலிராமன் பூனை கூடப் பாலைக் கண்டு அத்தனை வேகமாக ஓட்டம் பிடித்திருக்காது. ஆனால் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யரா விடுபவர்? அவரும் என்னைப் பின் தொடர்ந்தார். ஓட்டப் பந்தயத்தில் நான் தான் ஜெயித்தேன். ஓட்டப் பந்தயத்தில் சரசு எனக்கு அளித்திருக்கும் பயிற்சி அண்ணுசாமி அய்யரின் மனைவி அவருக்கு அளித்ததில்லை.

"ஓட்டப்பந்தயத்தில் சரசு அளித்த பயிற்சி" என்றதும் சரசுவைக் கண்டு பயந்து ஓடித்தான் நான் வேகமாக ஓடக் கற்றுக்கொண்டிருக்கிறேனோ என்று நினைத்து விடாதீர்கள். சரசுவைக் கண்டு பயந்து வீட்டுக்குள்ளேதானே ஓடி ஒளிய முடியும்! வீட்டுக்கு வெளியே ஓடி வர முடியுமா? வந்தால் அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் கண்டு சிரிக்க மாட்டாரா!

சரசு எனக்கு அளித்த பயிற்சியே வேறு. காரியாலயம் போவதற்காக நான் தினம் காலை பத்து மணி வண்டியைப் பிடிக்க வேண்டியிருக்கிறது. பத்து மணி வண்டியைப் பிடிக்கும் எனக்கு தினம் 9-55க்குத் தான் சாப்பாடு போடுவது என்று சரசு வைத்திருக்கிறாள். ஆகவே ஐந்து நிமிஷத்துக்குள் விடு, விடென்று சாப்பிட்டு, குடு, குடு என்று ஓடி, கடு, கடு என்று முகத்தை வைத்துக்கொண்டு, ஜிறு, ஜிறு என்று ஓடிக் கொண்டிருக்கும் ரயில் வண்டியைப் பிடிப்பேன். ரயில் வண்டியைப் பிடிப்பதற்காக ஓடி ஓடி, நான் இப்பொழுது ஓட்டப் பந்தயத்தில் கெட்டிக்காரனாகி விட்டேன்.

ஸாதாரணமாக, மின்சார வண்டி புறப்பட்டதும், அவசரமாக ஓடிவந்து ஏறும் பிரயாணிகளை, "ஏறாதே! ஏறாதே!" என்று கூச்சலிட்டு எச்சரிப்பதற்காகவே போர்ட்டர்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் கூட என்னைக் கண்டால் ஏறாதே என்று கத்த மாட்டார்கள். இது நிற்க.

கடைசியில் அண்ணுசாமி ஓட்டப் பந்தயத்தில் தோற்று, மனமுடைந்து வீடு திரும்பினார்.

இனாம் டிக்கட்டைக் கண்டு நான் இத்தனை பயப்படுவானேன் என்று நீங்கள் கேட்கலாம். தெனாலிராமன் பூனை பாலைக் கண்டு ஏன் அத்தனை பயந்தது? அதே காரணம்தான்.

சென்ற நாளைக்கு முன்னாள் ஒரு நாள் சரசுவை "ஸினிமாவுக்குப் போய்விட்டு வரலாம்" என்று கூப்பிட்டேன்.

"ஐயோ, ஸினிமாவா? நான் மாட்டேன்" என்றாள்.

"ஏன்?"

"நீங்கள் பணம் கொடுத்தல்லவா டிக்கட் வாங்குவீர்கள்?"

"பின் பணம் கொடுக்காமலும் டிக்கட் வாங்க முடியுமா?"

"ஏன் முடியாது! அடுத்தவீட்டு அண்ணுசாமி அய்யர் வீட்டில் பணம் கொடுத்தா டிக்கட் வாங்குகிறார்கள்? யாரிடமோ பாஸ் வாங்கிக்கொண்டல்லவா வீட்டில் உள்ள அத்தனை பேரும் பட்டாளமாகப் போகிறார்கள்?" என்றாள்.

சரசு சொன்னதைக் கேட்டதும் யாரிடமாவது பாஸ் வாங்கிக்கொண்டு சினிமாவுக்குப் போனால்தான் என்ன என்று எனக்கும் ஆசை தோன்றிற்று. முன் காலமாய் இருந்தால் "சட்! எதற்காக ஒருவனைப் பாஸுக்காகக் கெஞ்ச வேண்டும்?" என்று தோன்றும். ஆனால் அது பிறந்தாலும் பிறந்தாள், "இனிமேல் டாம், டூம் என்று குடித்தனம் பண்ணக்கூடாது. செட்டாக இருக்கவேண்டியதுதான்" என்று தோன்ற ஆரம்பித்து விட்டது. பெண் பிறந்தாலே இப்படித் தோன்றும் போலும்.

ஆகவே பாஸுக்காக வேண்டி என் நண்பர் ஒருவரைத் தேடிப் போனேன். இவருக்குத் தூர பந்து ஒருவர் சினிமாக் கொட்டகையில் வேலையாக இருப்பதால் இவரால் பாஸ் வாங்கிக் கொடுக்க முடியும் என்று இவரிடம் போனேன்.

முதல்நாள் நண்பர் வீட்டில் இல்லை. இரண்டாம் நாளும் வீட்டில் இல்லை. மூன்றாம் நாள் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். ஆகவே பாஸ் விஷயத்தைப் பிரஸ்தாபிக்க முடியவில்லை. நாலாம் நாள் கண்டு பேசினேன். "நாளைக்கு வாருங்கள்" என்றார். அடுத்த நாளும் "நாளைக்கு வாருங்கள்" என்றார். இதற்கடுத்த நாளும் "நாளைக்கு வா" என்று தான் அலைக் கழிக்கப் போகிறார் என்று நினைத்துப் போனேன். ஆனால் அவர் "நாளைக்கு வாருங்கள்" என்று சொல்லவில்லை. "நாளை யன்றைக்கு வாருங்கள்" என்று சொன்னார்.

எனக்கா அலுத்து விட்டது. இப்படி அலைக்கழிக்கிறாரே என்று இருந்தது. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது பழமொழி. ஆனாலும் என் முயற்சி அதிகரிக்க, அதிகரிக்க அவரிடம் நான் பட்ட இகழ்ச்சியும் அதிகரித்துக் கொண்டு வந்தது. ஒருநாள் நான் போன சமயம், என்னைக் கண்டதும், சட்டையை மாட்டிக் கொண்டு "ஒரு அவசர காரியமாகப் போகவேண்டியிருக்கிறது" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார். என்னைக் கண்டு ஓடி ஒளியவேண்டிய அவசர காரியத்தைத் தவிர அவருக்கு வேறு ஒரு அவசர காரியமும் இருப்பதாகத் தெரியவில்லை.

"சட்! இனிமேல் இந்த மனுஷன் முகத்தில் விழிக்கக் கூடாது" என்று தோன்றிற்று. ஆனால் அதுவரை நான் நண்பரைப் பார்ப்பதற்காகச் செலவழித்த டிராம் சத்தத்தையும், ரிக்ஷா சத்தத்தையும் நினைத்துப் பார்த்தபோது வயிறு பகீர் என்றது. "ஐயோ! இந்தப் பணத்தைக் கொடுத்து இரண்டு சினிமாவுக்குப் பணம் கொடுத்தே டிக்கட் வாங்கியிருக்கலாமே" என்று பட்டது. அத்தனை பணம் நண்பரைப் பார்ப்பதற்காகச் செலவழித்த பிறகு, டிக்கட் வாங்காமல் போவதா என்று மேலும் அவரை நெருக்கத் தொடங்கினேன்.

கடைசியில் என் சங்காத்தம் பொறுக்க மாட்டாமல், சினிமாவுக்குப் பாஸ் கொடுத்தார் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

பாஸில் எந்த வகுப்பு என்று குறிப்பிடப் படவில்லை. "என்ன ஸார்! எந்த வகுப்பு என்று போடவில்லையே?" என்று கேட்டேன்.

"எந்த வகுப்பு என்று போடாவிட்டால் என்ன ஸார்! பாஸ் என்றாலே இரண்டனை

கிணறு வெட்டப் பூதம்!

கம்பெனி முதலாளி தம்முடைய தலைமைக் குமாஸ்தாவை அழைத்து, அவரிடம் பின்வருமாறு சொன்னார்:—

"இங்கிருக்கும் எல்லாக் குமாஸ்தாக்களைக் காட்டிலும் நீர் ஒருவர்தான் மனப்பூர்வமாகக் கம்பெனிக்கு உழைக்கிறீர். நேரத்தையோ காலத்தையோ கவனிப்பதில்லை. வேலையையே பெரிதாக நினைக்கிறீர்" என்றார்.

குமாஸ்தாக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் முதலாளியைப் பார்த்து, "வேறு விசேஷம் ஒன்றும் இல்லையே?" என்றார்.

"இருக்கிறது—ஆகையினாலே, உம்மை வேலையிலிருந்து நிறுத்துவதென்று முடிவு செய்திருக்கிறேன். ஏனெனில் உம்மைப் போன்றவர்கள்தான் திடீரென்று விலகிப் போட்டிக் கம்பெனி நடத்துவார்கள்!" என்றார் முதலாளி.



ரூபாய் வகுப்பு என்றுதான் அர்த்தம். இதி லென்ன சந்தேகம்?" என்றார்!

ஆனால் பாஸுக்காக நான் பட்ட சிரமத்தை யெல்லாம் சரசுவிடம் சொல்லவில்லை. எந்தப் புருஷனாவது தான் பட்ட அவமானத்தை மனைவியிடம் சொல்வானா என்ன?

எனக்குள்ள செல்வாக்கினால்தான் பாஸ் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று நினைத்துச் சரசு சந்தோஷப்பட்டாள். அன்றைய சாயந்திரமே சினிமாவுக்குப் புறப்பட வேண்டுமென்று துடியாய் நின்றாள். அன்று சாயந்திரமே, நான், சரசு, இன்னும் வீட்டில் உள்ள எல்லாரும் சினிமாவுக்குப் புறப்பட்டோம்.

கொட்டகையில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் தம் குடும்பத்துடன் வந்திருந்தார். என்னையும், என் குடும்பத்தினரையும் கண்டதும், "வாருங்கள் ஸார்! உள்ளே போகலாம்" என்று கூப்பிட்டார். வழக்கமாக நாங்கள் ஒரு ரூபாய் இரண்டணா வகுப்புக்குப் போவது வழக்கம், அதற்குத்தான் கூப்பிட்டார். ஆனால் நான் பெருமையாக, "எனக்கு இரண்டரை ரூபாய் வகுப்புக்குப் பாஸ் இருக்கிறது ஸார்!" என்று சொல்லி விடவே அவர் உள்ளே போய் விட்டார். பாஸை அங்கிருந்த ஒருவரிடம் காண்பித்தேன்.

பாஸைப் பார்த்ததும் அவர் என்னையும், என்கூட வந்தவர்களையும் ஏற இறங்கப் பார்த்தார். பார்த்துவிட்டு, "அதோ நிற்கிறாரே, அவரிடம் கொடும்" என்றார். உடனே அவரிடம் போனேன். அவர் இன்னொருவரிடம் அனுப்பினார். இன்னொருவர் மற்றொருவரிடம் அனுப்பினார். இப்படியாக, மாறி, மாறிக் கடைசியில் மானேஜர் அறைக்குப் போனேன்.

அந்தச் சீட்டில் மானேஜர் கையெழுத்திட்டால்தான் உள்ளே விடுவார்களாம். ஆனால் ஆறரை மணி ஆட்டத்துக்கு ஏழு மணி ஆகியும் மானேஜர் வரவில்லை. அவர் ஏன் வருகிறார்? இம்மாதிரி ஓஸி டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டு ஆஸாமிகள் காத்துக் கொண்டிருப்பார்கள் என்று அவருக்குத் தெரியாதா, என்ன?

சரி, வீடு திரும்ப வேண்டியதுதான் என்று திரும்புகையில் மானேஜர் வந்தார். கடைசியில் பாஸில் கையெழுத்திட்டார்.

உடனே அங்கிருந்த ஒரு ஆள் எங்களை இரண்டரை ரூபாய் வகுப்புக்கு அழைத்துச் சென்றான். பாஸினால் நான் பட்ட எல்லா அவமானங்களையும் மறந்தேன்.

ஆனால் ஐந்து நிமிஷம் ஆகியிருக்காது, இன்னொருவர் வந்தார். "ஸார், மன்னிக்கணும்" என்றார்.

"ஏன்?"

"இல்லை. வந்து,......" என்று ஏதோ குழறினார்.

"என்ன, தைரியமாகச் சொல்லும்" என்றேன்.

"இல்லை, வந்து......இந்த இடம் யாரோ ரிஸர்வ் பண்ணியிருக்கிறார்களாம். ஆகவே மானேஜர் உங்களுக்கு வேறு இடம் கொடுக்கச் சொன்னார்" என்றார்.

"அப்பாடா! இதைச் சொல்வதற்குத்தானா இவ்வளவு தடுக்கம்? வேறு இடமே கொடுக்களேன்" என்றேன்.

அப்படியே வேறு இடத்துக்கு அழைத்துப் போனார். அந்த வேறு இடம் ஒன்பது அணா வகுப்பு என்று தெரிந்ததும் சரசுவுக்கு ஏற்பட்ட அவமானம் கொஞ்சம் நஞ்சமல்ல. அவமானத்தினால் அப்படியே நாற்காலியில் அமர்ந்தவள் படம் முடிகிற வரை எழுந்திருக்கவே இல்லை.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். இலவசச் சினிமா டிக்கட்டைக் கண்டு எனக்குப் பயமாய் இருக்குமா, இருக்காதா? வேண்டாம் ஐயா, வேண்டாம்!

பாபநாசம் சிவன் பஜனை

திருவையாற்றில் வருஷந்தோறும் நடக்கும் ஸப்தஸ்தான மஹோத்ஸவம் இவ் வருஷம் ஏப்ரல் 28உ சனிக்கிழமை நடைபெறுகிறது. அன்று ஏழு ஸ்தலங்களுக்கும் ஸ்வாமி ஊர்வலமாக எழுந்தருளும் போது, பக்தர்களின் கூட்டத்துடன் பாபநாசம் சிவன் அவர்கள் பஜனை செய்துகொண்டு தொடர்வார்கள். இந்த பஜனைத் தொண்டு இடைவிடாமல் 24 மணி நேரம் நடைபெறுமென்று அறிகிறோம்.



ஓ, மந்திரக் காளி!



பைத்தியம் பலவிதம். அதில் மந்திரப் பைத்தியம் ஒன்று. புதுச்சேரியில் அந்தக் காலம் ஒரு ஜக்கம்மா தாஸன் இருந்தான். அவன் அண்டப் புளுகுக்குமேல் ஆயிரம் அவாந்தரப் புளுகுகள் கஜப் புளுகுகள் எல்லாம் கட்டிவிடுவான். அவன் சாடுகளுக்கெல்லாம் ஜக்கம்மாவின் பெயரே முத்திரையாகும். ஆள் கருங்காலிக் கம்பம்போல் வழவழ என்றிருப்பான். நெற்றி நிரம்பக் குங்குமம். ஒரு மொச்சையும் போட்டுக் கண் சிவந்து விழித்தானானால் இவனே ஜக்கம்மாளின் சுவீகார புத்திரன் என்று தோன்றும்.

ஒரு நாள் வல்லபதாஸ் அவனை இரகசியமாக அழைத்துச் சென்று "அண்ணே, இந்த ஐயரை எப்படியாவது ஜக்கம்மாளிடம் காட்டிவிட்டுக் கை காலை ஒடி; அல்லது பைத்தியம் பிடிக்க வைத்துவிடு. பிறகு நான் பிரிட்டிஷ் எல்லைக்குத் தூக்கிக்கொண்டு போய்விடுவேன். உனக்குச் சரியாக ஆயிரம் ரூபாய் கிடைக்கும்" என்றான். "ஹால், ஜக்கம்மா; ஐயரை அந்தரத்தில் தூக்கியடித்துச் சென்னபாபு சமுத்திரத்திலே பந்து போலப் பைத்தியம் பிடித்து விழச்செய்வை. மந்திரக்காளி, மகமாயி!" என்று ஜக்கம்மா தாஸன் உடனே சக்கரம்போட்டு விஷமம் பண்ணத் தொடங்கிவிட்டான்.

ஒரு நாள் மந்திரவாதி, "இன்று ஜக்கம்மா மூர்த்தண்யமாயிருக்கிறாள். தாங்கள் மட்டும் ஐயரின் காலடி மண் இரண்டு பிடி கொண்டு வாருங்கள். நாளையே ஐயர் வேட்டியைக் கிழித்துக்கொண்டு உளறித் திரிவார்" என்று சொல்லியனுப்பினான். வல்லபதாஸ் தெருவில் பழியாய்க் கிடந்து, சாயங்காலம் ஐயர் நடந்து சென்றபோது, பின்னாலேயே சென்று, மளக் கென்று அவரது காலடி மண்ணை அள்ளிக்கொண்டு வேகமாகத் திரும்பினான். ஆள் இருபதடி சென்றிருப்பான். ஐயர் இராணுவ நடை போட்டு அவனைத் தூக்கிப் பிடித்து "ஓய், ஓய்! இதெல்லாம் என்ன வேலை?" என்று சிங்க விழியால் அவனைத் தீப்பறக்கப் பார்த்தார். ஆள் அரண்டு போனான். என்றாலும் பின்னால் ஒற்றர் இருந்ததால் தைரியங் கொண்டு, "பின்னே என்ன, ஐயா? சுதேசிக்களெல்லாம் புச்சேரிக்கு வருவது. ஆகாதும் போகாதும் செஞ்சுட்டுத் தப்பிக்கிறது. நீர் அப்படிச் செய்யலாம்; நான் இப்படிச் செய்தாலென்னவாம்?" என்றான்.

"ஓய் நீர் என்ன செய்வீர்? சொல்லும்."


"ஜக்கம்மா உமது மூளையைக் கலக்கும்."

"ஓய்! ஓய்! ஜக்கம்மாளால் ஆனதைச் செய்துகொள்ளும்" என்று சொல்லி விட்டு ஐயர் வேகமாக நடந்தார்.

மந்திரவாதி இரவெல்லாம் புட்டிபோட்டு ஜக்கம்மாளுக்கு நுரையிட்டான். ஐயர் மூளை அப்போதுதான் எமர்ஸனின் தன்னம்பிக்கையை எழுதிக்கொண்டிருந்தது. வல்லபதாஸ் "அண்ணே! ஐயருக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையே" என்று விசனித்தான். மந்திரவாதி "இதோ பார்!" என்று ஐயர் தெருவில் நடக்கும்போதெல்லாம் "மந்திரக் காளி ஜக்கம்மா!" என்று அவரை நோக்கிப் புழுதி மண்ணை வாரினான். ஐயர் புன்னகை புரிந்துகொண்டே போனார். இதைக் கேட்ட பாரதியார் "அட ஜக்கம்மா? மாளகம்மா" என்று கூறிச் சிரித்தாராம்!

—ஸ்ரீ சுத்தானந்த பாரதி.


நிறுத்து!



"நிறுத்து! அதற்குள் கட ஆரம்பிக்க வேண்டாம்! நமது புகைப்பட நிருபர் இன்னும் காமராவைச் சரிப்படுத்திக் கொள்ளவில்லை."

[போர்க்களத்திலிருந்து செய்தி அனுப்பும் பத்திரிகை நிருபர்களைக் கேலி செய்வதற்காக ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் வெளியான படம்.]





இந்தப் போராட்டத்தில் பெருகிய வெற்றி [illegible]

சகிப்புத் தன்மையின் வெற்றி

1944-ம் வருஷம் மிகவும் கவலைக்கிடமாயிருந்த மே, ஜூன் மாதங்களில் வெளியான செய்திகளிலிருந்து இம்பால், கோஹிமா, பிஷன்பூர், உக்ரூல் என்னும் பெயர்கள் உங்களுக்கு ஞாபகமிருக்கின்றனவா? இன்று நமது போர் வீரர்களின் விடாமுயற்சியின் பயனாக அந்தப் பெயர்களுக்குப் பதிலாகப் புதுப் பெயர்களை நாம் கேள்விப்படுகிறோம். அவை வருமாறு:—போர்ட் வைட், காலிமியோ, காலிவா, யூ, அக்யாப், ஷ்வேபோ, படத்தைப் பாருங்கள். அப்போது அதன் அர்த்தம் விளங்கும். பர்மாவில் 80,000 சதுர மைல்களுக்கு மேல் (அந்தேசத்தில் மூன்றில் ஒரு பாகம்) விரோதிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஜப்பானியர்களின் ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்டவர்களுக்குச் சேதமேற்பட்டிருக்கிறது.

இந்த வெற்றி வாகை சூட உதவியவர்கள் இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும், மாகாணங்களிலிருந்தும் வந்திருக்கின்றனர். அவர்கள் பல ஜாதிகளையும், மதங்களையும் சேர்ந்தவர்கள். வேலையை செட்டப் பாடுபடும் அவர்கள் இந்த வெற்றி பெறுவதற்கு எவ்வளவு சகிப்புத் தன்மையோடு போராடினார்கள் என்று நாம் அனுமானிக்கத்தான் முடியும். அதனால் நமக்கு அமைதியும் பாதுகாப்பும் நிச்சயமாக ஏற்படும் என்னும் உறுதி நம் உள்ளங்களில் பதியச் செய்கிறது. ஆனாலும் ஜப்பானை அடியோடு நிச்சயமாய்த் தோற்கடித்தாலொழிய இந்தியா அவர்கள் அக்கிரமங்களுக்குத் தப்பியிருக்க முடியாது. ஆகையால் நாம் எல்லோரும் எதிரியைத் தாக்க உதவுவோமாக.



இவ்வளவு சிரமமான பாதை வழியாகப் போர் [illegible]

முடிவான

வெற்றிபெற முந்துங்கள்

AAA-101

இந்திய சர்க்கார் தகவல், பிரசார இலாகா வெளியீடு.

மகத்தான 2-வது வாரம்

திருச்சி	....	ராஜா
மதுரை	....	தினமணி
கோவை	....	ராஜா
கும்பகோணம்	....	டயமண்ட்

முதலிய இடங்களிலும்

இதர பல முக்ய நகரங்களிலும் வெற்றிகரமாக நடைபெறுகிறது!




நீங்கள் அவசியம் பார்க்க வேண்டிய படம்!



FOR MADRAS CITY & TAMILNAD : SUMUKA PICTURES.

FOR MALABAR, TRAVANCORE & COCHIN : PARAMOUNT PICTURES, BROADWAY - ERNAKULAM


MAGNUMS
de LUXE TENOR
Guaranteed
100% Pure
Virginia
Tobacco
TBB

கல்கி



KALKI ஏப்ரல் 22,1945 4 அணா


உயர் ரகவாஸனை எஸன்ஸுகளும் வர்ணங்களும்
ஸோடா, ஸிரப், சமையல் பண்டங்கள் இவைகளுக்கு ஏற்ற உயர்ந்த பக்குவம் அளிப்பதற்கு எமது எஸன்ஸ், கலர்களுக்கு மிஞ்சியவை வேறெதுவுமே இடையாது.
BLACK CAT BRAND
AROMATIC CHEMICALS AMINJIKARAI MADRAS.


உத்திரவாதமுள்ள ஆபரணங்களுக்கும் வைரங்களுக்கும்
அசல் வெள்ளி சாமான்களுக்கும்
PAR
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
கடை வீதி, "ஸ்வர்ண மாளிகை" கோயமுத்தூர்.
தந்தி. "ராஜா"..... தபால் பெட்டி. 139. ....போன். 218.A

Regd. No. M 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.